   *கரும்பு தின்றான்.*
   *மேற்கொண்ட தொடர் கரும்பைத் தின்றான் என்னும் பொருளை உணர்த்துகிறது.*

3. **தொகை நிலைத் தொடர் வகைகளில் ஏதேனும் இரண்டினை எழுது?**
   **தொகை நிலைத் தொடர் ஆறு வகைப்படும்;**
   - வேற்றுத் தொகை
   - வினைத் தொகை

4. **சென்னை சென்றார் -உருபுடன் விவரித்து எழுது?**
   **சென்னை சென்றார்.**
   *இத்தொடர் சென்னைக்குச் சென்றார் என விரிந்து நின்று பொருள் தருகிறது. கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களுக்கு இடையில் "கு" என்னும் நான்காம் வேற்றுமை உருபு இல்லை.*

5. **வேற்றுமைத் தொகைக்கும் உடன் தொகைக்குமான சான்றினை எழுது?**

| | தொகை | சான்று |
|---|---|---|
| ➢ | வேற்றுமைத் தொகை | - மதுரை சென்டர் |
| ➢ | உடன் தொக்க தொகை | - தேர்ப்பாகன் |

6. **காலம் கரைந்து பெயரெச்சமே வினைத் தொகை இக்கூற்று சரியா? தவறாசான்று தருக? .**
   *காலம் கரைந்து பெயரெச்சமே வினைத் தொகை சரி.*
   ***சான்று: வீசுதென்றல்.***



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

7. **கொல்களிறு - வினைத் தொகை அமைப்பினை எழுது?**
**கொல்களிறு விளக்கம்:**
கொன்ற களிறு, கொல்கின்ற களிறு, கொல்லும் களிறு.

8. **பண்புத் தொகை விகுதியை மறைந்து வரும் விகுதியை எடுத்துகாட்டுடன் விளக்குக?**
**பண்புத்தொகை விளக்கம்:**
நிறம், வடிவம், சுவை, அளவு முதலானவற்றை உணர்த்தும் பண்புப்பெயருக்கும் அது தழுவிநிற்கும் பெயர்ச்சொல்லுக்கும் இடையில் "**மை**" என்னும் பண்பு விகுதியும் **ஆகிய, ஆன** என்னும் பண்பு உருபுகளும் மறைந்து வருவது **பண்புத்தொகை** எனப்படும்.

9. **உவமஉருபு எங்கே மறைந்து வரும்?**
**உவமஉருபு மறைந்து வருமிடம் :**
உவமைக்கும் பொருளுக்கும்(உவமேயம்) இடையில் உவமஉருபு மறைந்து வருவது உவமைத்தொகை எனப்படும்

10. **நிலவும் வானமும் - உம்மை தொகையாக மாற்று?**
**உம்மைத் தொகை:**
நிலவு வானம்

11. **பச்சைச் சட்டைக்காரர்கள் போராடுகின்றனர் - எவ்வகை தொடர்?**
**பச்சைச் சட்டைக்காரர்கள் போராடுகின்றனர்-** அன்மொழித்தொகை

12. **வேற்றுமை உருபுகள் இரண்டினை எழுது?**
**வேற்றுமை உருபுகள்** (8)
ஐ, ஆல், கு, இன், அது, கண்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

உரைநடை உலகம்

## இயல் – 3 விருந்து போற்றுதும்!

1. ***முளிதயிர் என்பதன் பொருள் யாது?***
   ***முளிதயிர் என்பதன் பொருள்:***
   *"முற்றிய தயிர்"*

2. ***விருந்தினருக்கும் உறவினருக்கும் உள்ள வேறுபாடு யாது?***
   ***விருந்தினருக்கும் உறவினருக்கும் உள்ள வேறுபாடுகள்:***
   *விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தினர் கருதுகின்றனர். உறவினர் வேறு, விருந்தினர் வேறு, முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர்.*

3. ***விருந்து புதுமை என்று கூறும் நூல் யாது?***
   *விருந்து புதுமை என்று கூறும் நூல் "தொல்காப்பியம்" ஆகும்.*

4. ***விருந்தோம்பலுடன் ஒப்பிடப்படும் மலர் யாது? அதன் தன்மை யாது?***
   *விருந்தோம்பலுடன் ஒப்பிடப்படும் மலர் அனிச்சம் மலர்*
   ***அனிச்சத்தின் தன்மை:*** *முகர்ந்தால் வாடிவிடும்*

5. ***"விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை" என்று வருந்தியவர் யார்? இவ்வடி உணர்த்தும் பண்பு யாது?***
   ***"விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை" என்று வருந்தியவர் கண்ணகி***
   *கோவலனை பிரிந்து வாழும் கண்ணகி அவனைப் பிரிந்ததைவிட விருந்தினரைப் போற்ற முடியாத நிலையை எண்ணியே வருந்துவதாகக் குறிப்பிடுகிறார் "இளங்கோவடிகள்". .*

6. ***நம் முன்னோர்கள் விருந்தோம்பலை விரும்பிச் செய்தனர் என்பதை உணர்த்தும் நூல்கள் யாவை?***
   ***விருந்தோம்பலைப் பற்றி கூறும் நூல்கள்:***
   - *தொல்காப்பியம்*
   - *சிலப்பதிகாரம்*
   - *கம்பராமாயணம்*
   - *கலிங்கத்துப்பரணி*
   - *புறநானூறு*



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

7. **"அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்" - விளக்குக.**

**"அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்" - விளக்கம்:**

விருந்தோம்பல் என்பது பெண்களின் சிறந்த பண்புகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. நடு இரவில் விருந்தினர் வந்தாலும் மகிழ்ந்து வரவேற்று உணவிடும் நல்லியல்பு குடும்பத் தலைவிக்கு உண்டு.

8. **விருந்தினரை எதிர்கொள்ளும் தன்மையாகக் குறுந்தொகை கூறும் செய்தி யாது?**

**விருந்தினரை எதிர்கொள்ளும் தன்மையாகக் குறுந்தொகை கூறும் செய்தி:**

இல்லத்தில் பலரும் நுழையும் அளவிற்கு உள்ள பெரிய வாயிலை இரவில் மூடுவதற்கு முன்னர், உணவு உண்ண வேண்டியவர்கள் யாரேனும் உள்ளீர்களா? என்று கேட்கும் வழக்கம் இருந்ததை, "பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்" என்ற குறுந்தொகை (118) அடிகள் புலப்படுத்துகின்றன.

9. **பெரியபுராணம் எடுத்துரைக்கும் விருந்தோம்பல் பற்றி எழுதுக?**

**பெரியபுராணம் கூறும் விருந்தோம்பல்:**

இளையான்குடி மாறநாயனாரின் வீட்டுக்கு வந்த சிவனடியார்க்கும் விருந்தளிக்க அவரிடம் தானியமில்லை; எனவே, அன்று விதைத்துவிட்டு வந்த நெல்லை அரித்து வந்து, பின் சமைத்து விருந்து படைத்த திறம் பெரியபுராணத்தில் காட்டப்படுகிறது.

10. **சரியான இரண்டு கூற்றுகளைத் தேர்ந்தெடு?**

**சரியான இரண்டு கூற்று :**

- நாயக்கர், மராட்டியர் ஆட்சிக்காலங்களில் மிகுதியான சத்திரங்கள் வழிச் செல்வோருக்காகக் கட்டப்பட்டன.
- கல்வியும் செல்வமும் பெற்ற பெண்கள் விருந்தும் ஈகையும் செய்வதாகக் கம்பர் குறிப்பிட்டுள்ளார்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

கவிதைப் பேழை

## இயல் – 3

## காசிகாண்டம்

1. **"வெற்றிவேற்கை" இந்நூலின் மற்றொரு பெயர் என்ன?**
வெற்றிவேற்கை நூலின் மற்றொரு பெயர் "நறுந்தொகை" ஆகும்.

2. **"காசிகாண்டம்" எந்தெந்த கருத்துகளை உள்ளடக்கி உள்ளது?**
**காசிகாண்டம் உள்ளடக்கிய கருத்துகள்:**
   - துறவு
   - இல்லறம்
   - மறுவாழ்வில் அடையும் நன்மைகள்
   - பெண்களுக்குரிய பண்புகள்
   - வாழ்வியல் நெறிகள்

3. **"எழுதல் முன் மகிழ்வன செப்பல்" இவ்வடிவில் இடம் பெற்றுள்ள "செப்பல்" என்பதன் பொருள் யாது?**
**'செப்பல்'** என்பதன் பொருள் பேசுதல்

4. **பாண்டியர்களின் தலைநகரம் எது? அங்கு நடைபெற்ற முக்கிய தொழில் எது?**
   - **பாண்டியர்களின் தலைநகரம்.** கொற்கை.
   - **அங்கு நடைபெற்ற முக்கிய தொழில்:**முத்துக் குளிப்பது.

5. **அதிவீரராம பாண்டியன் இயற்றிய நூல்கள் யாவை?**
**அதிவீரராம பாண்டியன் இயற்றிய நூல்கள்:**
   - நைடதம்
   - லிங்கப்புராணம்
   - கூர்ம புராணம்
   - வாயுசம்கிதை
   - திருக்கருவை அந்தாதி



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

கவிதைப் பேழை

# இயல் – 3

## மலைபடுகடாம்

1. **புலவர்கள், வனவர்களிடம் தங்களை எவ்வாறு அறிமுகம் செய்துகொள்ள வேண்டும் என்று கூறுகின்றனர்?**
   புலவர்கள், வனவர்களிடம் தங்களை "உறவினர் போலவே" அறிமுகம் செய்து கொள்ள வேண்டும் என்று கூறுகின்றனர்.

2. **மலைபடுகடாம் - பெயர்க் காரணம் கூறுக?**
   **மலைபடுகடாம் - பெயர்க் காரணம்:**
   மலையை யானையாக உருவகம் செய்து மலையில் எழும் பலவகை ஓசைகளை அதன் மதம் என்று விளக்குவதால் இதற்கு மலைபடுகடாம் என்று அழைக்கப்படுகிறது.

3. **ஆற்றுப்படை - குறிப்பு வரைக?**
   **ஆற்றுப்படை:**
   ஆற்றுப்படுத்தும் கூத்தன், வள்ளலை நாடி எதிர்வரும் கூத்தனை அழைத்து, யாம் இவ்விடத்தே சென்று இன்னவெல்லாம் பெற்று வருகின்றோம், நீயும் அந்த வள்ளலிடம் சென்று வளம்பெற்று வாழ்வாயாக என்று கூறுதல் "ஆற்றுப்படை".

4. **பூக்கள் எவ்வாறு இருக்கும்?**
   பூக்கள் எரியும் நெருப்பைப் போல ஒளிரும்படி இருக்கும்.

5. **கடினப் பாதையில் எவ்வோசை எழும்?**
   **கடினப் பாதையில் எழும் ஓசை:**
   அசையும் மூங்கில்களின் ஓசை".

6. **பகலில் சேர்ந்து தங்குங்கள். இரவில் இளைப்பாறிச் செல்லுங்கள். இக்கூற்று சரியா? தவறா? ஏன்?**
   **இக்கூற்று** : தவறு
   **காரணம்** : பகலில் இளைப்பாறிச் செல்லுங்கள். இரவில் தான் சேர்ந்து தங்குங்கள் என்பது தான் சரியானது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

7. ***புலவர்கள் பரிசில் பெறச் செல்லும்போது எவ்வகையான உணவு அவர்களுக்கு வழங்கப்பட்டது?***
***புலவர்களுக்கு வழங்கும் உணவு:***
*நெய்யில் வெந்த மாமிசத்தின் பொரியலையும் தினைச் சோற்றையும் உணவாகப் பெறுவீர்கள்.*

8. ***ஊர் ஊராகச் சென்று மக்களை மகிழ்வித்தவர் யார்?***
***ஊர் ஊராகச் சென்று மக்களை மகிழ்வித்தவர்:***
*கூத்தர், பாணர், விறலியர்*

9. ***பண்டைத் தமிழர் எவ்வெவற்றிலெல்லாம் சிறந்திருந்தனர்?***
***பண்டைத் தமிழர்கள் சிறந்திருந்த்து :***
*பண்டைத் தமிழர்கள் பண்பில் மட்டுமன்றி, கலைகளிலும் சிறந்து விளங்கினர்.*

10. ***மலைபடுகடாமின் தலைவன் பெயர் என்ன?***
***மலைபடுகடாமின் தலைவன் பெயர்:*** *"நன்னன்"*

கற்கண்டு

## இயல் – 3

## தொகாநிலைத் தொடர்

1. ***தொகாநிலைத் தொடர் என்றால் என்ன?***
*ஒரு தொடர் மொழியில் இருசொற்கள் இருந்து அவற்றின் இடையில் சொல்லோ உருபோ இல்லாமல் அப்படியே, பொருளை உணர்த்துவது தொகாநிலைத் தொடர் எனப்படும்.*

2. ***பறவை பறந்தது - விவரி?***
***பறவை பறந்தது:***
*எழுவாய்த் தொடர். மேற்கண்ட தொடர்களிலும் பெயர், வினை, வினா ஆகியவற்றுக்கான பயனிலைகள் வந்து எழுவாய்த் தொடர்கள் அமைந்துள்ளன.*



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

3. **பாரதியார் கவிஞர், நண்பனே படி! - எவ்வகைத் தொடர் என்பதை எழுதுக?**
**பாரதியார் கவிஞர்** - எழுவாய்த் தொடர்
**நண்பனே படி!** - விளித் தொடர்

4. **மழை நிற்குமா - இதில் எது பயனிலை? எது எழுவாய்?**
**மழை** - எழுவாய்த் தொடர்
**நிற்குமா** - பயனிலை

5. **ஆடினாள் மாதவி - இலக்கண விளக்கம் தருக?**
**இலக்கண குறிப்பு: ஆடினாள் மாதவி - வினைமுற்று**
வினைமுற்றுடன் ஒரு பெயர் தொடர்வது வினைமுற்றுத் தொடர் ஆகும்.

6. **பெயரெச்சம் என்றால் என்ன? சான்று தருக?**
**பெயரெச்சம்:**
முற்றுப் பெறாத வினை, பெயர்ச் சொல்லைத் தொடர்வது பெயரெச்சத் தொடர் எனப்படும். **எ.கா:** கேட்ட பாடல்

7. **படித்து மகிழ்ந்தனர் - விவரி.**
படித்து மகிழ்ந்தனர் - "படித்து" என்னும் எச்சவினை "மகிழ்ந்தனர்" என்னும் வினையைக் கொண்டு முடிந்துள்ளது. இது வினையெச்சத் தொடர்.

8. **கூட்டுநிலைப் பெயரெச்சங்களுக்கான சான்றுகள் இரண்டினை எழுதுக.**
**கூட்டுநிலைப் பெயரெச்சங்களுக்கான இரண்டு சான்றுகள்:**
   - கேட்க வேண்டிய பாடல்
   - சொல்லத் தக்க செய்தி

9. **உரிச்சொற்கள் நான்கினை எழுதுக.**
**உரிச்சொற்கள் நான்கு:**
   - மாமதுரை
   - சால சிறந்தது
   - நனி நன்று
   - கடி பெரிது



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

10. அடுக்குத்தொடர் எந்தெந்த பொருள்களில் வரும்?
- அசை
- விரைவு
- வெகுளி
- உவகை
- அச்சம்

## இயல் – 4 உரைநடை உலகம்
## செயற்கை நுண்ணறிவு

1. **"நான் விரும்பும் தமிழகம்" என்னும் தலைப்பில் பள்ளி மின்னஞ்சல் முகவரிக்கு எழுதியனுப்ப வேண்டியவை யாவை?**
"நான் விரும்பும் தமிழகம்" என்னும் தலைப்பில் ஒருபக்க அளவில் கவிதையும் நான்குபக்க அளவில் கட்டுரையும் எழுதிப் பள்ளி மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

2. **மாணவர் எழுதியனுப்பிய நான்குபக்க அளவிலான கட்டுரை எதன் பின்னரே தேர்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்?**
உங்கள் படைப்பு, உங்களின் செயற்கை நுண்ணறிவு உதவியாளரைக் கொண்டு எழுதப்படவில்லை என்று பள்ளியின் செயற்கை நுண்ணறிவு வல்லுநரிடம் சான்று பெற்ற பின்னேரே தேர்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

3. **2016 இல் ஐ.பி.எம் நிறுவனத்தின் வட்சன் கண்டுபிடித்தது யாது?**
2016 இல் ஐ.பி.எம் நிறுவனத்தின் செயற்கை நுண்ணறிவுக் கணினியான வாட்சன், சில நிமிடங்களில் இரண்டு கோடித் தரவுகளை அலசி, நோயாளி ஒருவரின் புற்றுநோயைக் கண்டுபிடித்தது.

4. **தற்போது மனிதர் அளிக்கும் எந்தெந்தச் சேவைகளை எதிர்காலத்தில் "ரோபோ"க்கள் அளிக்கும்?**
ஜப்பானில் சாப்ட்வங்கி உருவாக்கிய இயந்திர மனிதனே பெப்பர். இது உலக அளவில் விற்பனையாகும். ஒரு ரோபோ வீட்டிக்கு, வகை, படிப்புக்கு என்று மூன்று வகை ரோபோக்கள் கிடைக்கின்றன. இவை மனிதரின்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

*முகபாவனைகளிலிருந்து உணர்வுகளை புரிந்து கொண்டு அதற்கேற்பச் செயல்படுகின்றன.*

5. ***எதற்கேற்ப மனிதர்கள் தங்களை மாற்றிக் கொள்வார்கள்?***
*மனிதக் கண்டுபிடிப்புகள் அனைத்திலும் நன்மை, தீமை என்று இரண்டு பக்கங்கள் இருந்தே வருந்திருக்கின்றன. அதற்கேற்ப மனிதர்கள் தங்களை மாற்றிக்கொள்வார்கள்.*

6. ***செயற்கை நுண்ணறிவுக்கு 'இலா' (நடுயு) ஒரு சோறு பதமாவது யாங்ஙனம்?***
*வங்கிக்கு வரும் வாடிக்கையாளருக்குக் கிடைக்கும் சேவைகளை அது இணையம் மூலம் அளிக்கிறது. செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த இந்திய வங்கிகள் ஆயத்தமாகிவருவதற்கு இந்த 'இலா' ஒரு சோறு பதம்.*

7. ***எதிர்காலத்தில் நாம் பயணிக்கும் ஊர்திகளைச் செயற்கை நுண்ணறிவு கொண்டு இயக்குவதால் நாம் அடையும் நன்மைகள் யாவை?***
*எதிர்காலத்தில் நாம் பயணிக்கும் ஊர்திகளைச் செயற்கை நுண்ணறிவைக் கொண்டு இயக்க வேண்டியிருக்கும் இத்தகைய ஊர்திகள் ஏற்படுத்தும் விபத்துகள் குறையும் போக்குவரத்து நெரிசல் இருக்காது.*

8. ***'செயற்கை நுண்ணறிவு' தொழில்நுட்பம் எவ்வாறு உலகளாவிய நுண்ணறிவு கொண்டு வணிகத்துக்கு உதவுகிறது?***
*உலகில் உள்ள பெரும்பாலான தொழில்நுட்பத்தை நிறுவனங்கள் இத்தொழில்நுட்பத்தை உருவாக்குவதிலும் பயன்படுத்துலும் விற்பனை செய்வதிலும் கவனம் செலுத்துகின்றன. இத்தொழில்நுட்பம் உலகளாகிய வணிகத்துக்கு உதவுகிறது.*

9. ***யாருக்கு வணிகவானம் வசப்படும்?***
*செயற்கை நுண்ணறிவை யார் முதலாவதாகவும் சரியாகவும் பயன்படுத்துகிறார்களோ அவர்களுக்கு வணிக வானம் வசப்படும்.*



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

10. **கல்வியறிவுடன் எதிர்காலத்தில் நான்காவது தொழிற் புரட்சிய நடத்துவதற்கு வேண்டிய அறிவுகள் எவையெவை?**
எதிர்காலத்தில் செயற்கை நுண்ணறிவு பற்றிய அறிவும் நான்காவது தொழிற்புரட்சியின் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் அறிவுமே நம்மை வளப்படுத்த உதவும்.

கவிதைப் பேழை

## இயல் – 4 பெருமாள் திருமொழி

1. **வித்துவக் கோட்டில் எழுந்தருளியுள்ள பெருமாளின் பெயர் என்ன?**
**வித்துவக் கோட்டில் எழுந்தருளியுள்ள பெருமாளின் பெயர்:**
உய்யவந்த பெருமாள் (திருமால்).

2. **நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தில் பெருமாள் திருமொழி எங்கு இடம்பெற்றுள்ளது?**
நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தில் பெருமாள் திருமொழி ஐந்தாம் திருமொழியாக இடம்பெற்றுள்ளது.

3. **"வாளால்" அறுத்துச் சுடினும் - இதனை இன்றைய நவீன மருத்துவமுறை ஒன்றுடன் ஒப்பிட்டு எழுதுக?**
இதய மாற்று அறுவைசிகிச்சை
எ.கா.இதய இயந்திரம், புற்றுநோய் அறுவைசிகிச்சை

4. **மீளாத் துயர்தரினும் வித்துவக்கோட்டம்மா - தெய்வத்தின் செயலாக இவ்வடி எதனைக் குறிப்பிடுகிறது?**
மீளாத் துயர்தரினும் வித்துவக்கோட்டம்மா இது உணர்த்தும் பொருள் நீங்காத துன்பத்தை எனக்கு தருதல்.

5. **புண்ணைக் குணப்படுத்தும் முறையைப் பெருமாள் திருமொழி கூறும் செய்தி யாது?**
மருத்துவர் உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது நன்மைக்கே என்று உணர்ந்து நோயாளி அவரை நேசிப்பார்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

6. **புண்ணைக் குணப்படுத்த நீ அறிந்த மருத்தவமுறை ஒன்றினை எழுதுக?**
வேப்பங் கொழுந்துடன் மஞ்சள் சேர்த்து அரைத்து புண்களின் மீது தடவினால் புண் ஆரும். அத்திப்பாலை புண்களின் மீது தடவினாலும் ஆரும்.

7. **இறைவனின் விளையாட்டாக இருப்பதாகக் குலசேகராழ்வார் குறிப்பிடுவது யாது?**
உனது விளையாட்டில் நீங்காத துன்பத்தை எனக்குத் தந்தாலும் உன் அடியவனாகிய நான் உன் அருளையே எப்பொழுதும் எதிர்பார்த்து வாழ்கின்றேன்.

8. **"வித்துவக்கோடு" - கேரளாவில் இன்று எவ்வாறு அழைக்கப்படுகிறது?**
"வித்துவக்கோடு" - கேரளாவில் இன்று திருமஞ்சை திவ்யதேசம் என்று அழைக்கப்படுகிறது.

9. **உனக்குத் தெரிந்த திவ்யதேசம் ஒன்றைக் குறிப்பிடுக?**
எனக்குத் தெரிந்த திவ்யதேசம் ஒன்று "வித்துவக்கோடு".

10. **உனக்குத் தெரிந்த ஆழ்வார் பெயரையும் ஊரையும் குறிப்பிடுக?**
எனக்குத் தெரிந்த ஆழ்வார்கள்:
    - பேயாழ்வார் (மயிலாப்பூர்)
    - பொய்கையாழ்வார் (காஞ்சிபுரம்)
    - பூதத்தாழ்வார் (மகாபலிபுரம்)
    - பெரியாழ்வார் (ஸ்ரீவில்லிப்பூத்தூர்)
    - பொடியாழ்வார் (திருமண்பங்குடி)



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

கவிதைப் பேழை

# இயல் – 4

## பரிபாடல்

1. **பரிபாடல் காட்டும் ஊழிகளை வரிசைப்படுத்துக?**
   **ஊழிகளின் வரிசைக்கள்:**
   - வானம்
   - நெருப்பு
   - காற்று
   - நீர்
   - நிலம்

2. **'ஓங்கு பரிபாடல்' - அடைமொழிப் பொருத்தத்தை ஆய்க?**
   குதிரையின் நீண்ட அடிகளைப் போன்று இப்பாடலும் நீண்ட அடிகளைக் கொண்டது.

3. **அண்டக் கரு எவ்வாறு தோன்றியது?**
   பெருவெளியில் அண்டத் தோற்றத்துக்குக் காரணமான கரு(பரமாணு) பேரொலியுடன் அணு தோன்றியது.

4. **சங்க இலக்கியங்களின் வழி நாம் அறிவன யாவை?**
   **சங்க இலக்கியம் வழி நாம் அறிவன:**
   ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தமிழ் மக்களின் வாழ்க்கை முறை, சமூக உறவு அறிவாற்றல், இயற்கையைப் புரிந்து கொள்ளும் திறன் போன்றவற்றைச் சங்க இலக்கியம் மூலம் நாம் அறிந்துக் கொள்கிறோம்.

5. **பரிபாடல் - குறிப்பு வரைக?**
   **பரிபாடல் குறிப்பு:**
   பரிபாடல் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகும். பாடப்பகுதிலுள்ள பாடலை எழுதியவர் கீரந்தையார். இந்நூல் "ஓங்கு பரிபாடல்" எனும் புகழுடையது. இது சங்க நூல்களுள் பண்ணோடு பாடப்பட்ட நூல். உரையாசிரியர்கள் இதில் எழுபது பாடல்கள் இருப்பதாகக் கூறியுள்ளனர். இன்று 24 பாடல்கள் கிடைத்துள்ளன.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

6. **வானியல் அறிஞர் எட்வின் ஹப்பிள் எதை நிரூபித்தார்?**

**ஹப்பிள் நிரூபித்தது:**

அமெரிக்க வானியல் வல்லுநர் எட்வின் ஹப்பிள் 1924 இல் நம் பால்வீதி போன்று பல பால்வீதிகள் உள்ளன என்று நிரூபித்தார்.

7. **அண்டம் குறித்து திருவாசகம் கூறுவது யாது?**

**அண்டம் குறித்து திருவாசகம் கூறுவது:**

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
சிறிய ஆகப் பெரியோன் தெரியின்" (திருவாசகம் 3-1-6)

அண்டப் பகுதிகளின் உருண்டை வடிவும், ஒப்பற்ற வளமையான காட்சியும் ஒன்றுக்கு ஒன்று ஈர்ப்புடன் நின்ற அழகினைச் சொல்வது.

கற்கண்டு

## இயல் – 4 இலக்கணம் – பொது

1. **இருதிணை என்பன யாவை?**

ஆறறிவுடைய மக்களை <u>உயர்திணை</u> என்றும் மற்ற உயிரினங்களையும் உயிரற்ற பொருள்களையும் <u>அஃறிணை</u>(அல்திணை) என்றும் வழங்குவர்.

2. **உயர்திணைப் பகுப்பு எவ்வாறு அடையும்?**

உயர்திணை ஆண்பால், பெண்பால், பலர்பால் என மூன்று பிரிவுகளை உடையது.

3. **அஃறிணையில் எவையெவை அடங்கும்?**

அஃறிணையில் ஒன்றன்பால், பலவின்பால் என இரு பிரிவுகளை உடையது.

4. **உயர்திணைக்குரிய பால் பகுப்பு யாவை?**

**உயர்திணைக்குரிய பால் பகுப்பு:**

- ஆண்பால்
- பெண்பால்
- பலர்பால்

5. **ஐம்பால் எவையெவை?**

- ஆண்பால்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- பெண்பால்
- பலர்பால்
- ஒன்றன்பால்
- பலவின்பால்

6. **அஃறிணைக்குரிய பால் பகுப்புகள் யாவை?**
**அஃறிணைக்குரிய பால் பகுப்புகள்:**
   - ஒன்றன்பால்
   - பலவின்பால்

7. **இடப்பெயர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**
இடப்பெயர்கள் மூன்று வகைப்படும்.
   - தன்மை
   - முன்னிலை
   - படர்க்கை

8. **தன்மைப் பெயர்கள் மற்றும் வினைகளுக்குச் சான்று தருக?**
இடப்பெயர்கள் எத்தனை வகைப்படும்.
**தன்மைப் பெயர்கள்** - நான், யான், நாம், யாம்....
**தன்மை வினைகள்** - வந்தேன், வந்தோம்

9. **முன்னிலை இடத்தைச் சான்றுடன் விளக்குக?**
**முன்னிலைப் பெயர்கள்** - நீ, நீர், நீவிர், நீங்கள்
**முன்னிலை வினைகள்** - நடந்தாய், வந்தீர், சென்றீர்கள்....

10. **படர்க்கைப் பெயர்கள் யாவை?**
**படர்க்கைப் பெயர்கள்** - அவன், அவள், அவர், அது, அவை....

11. **வினைகள் எதன்வழி இடத்தைச் சுட்டுகின்றன?**
வினைகள் பெயரின் வழி இடத்தைச் சுட்டுகின்றன.

12. **வழு என்றால் என்ன?**
இலக்கண முறையின்றிப் பேசுவதும் எழுதுவதும் வழு எனப்படும்.

13. **வழாநிலை என்றால் என்ன?**இலக்கண முறையுடன் பிழையின்றிப் பேசுவதும் எழுதுவதும் வழாநிலை எனப்படும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

14. **வழுவமைதி - விளக்குக?**

இலக்கணமுறைப்படி பிழையுடையது எனினும், இலக்கண ஆசிரியர்களால் ஏதேனும் ஒரு காரணம் கருதி, பிழையன்று என ஏற்றுக்கொள்ளப்படுவது வழுவமைதியாகும்.

15. **வழுவமைதி எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

**வழுவமைதி ஐந்து வகைப்படும்:**

- திணை வழுவமைதி
- பால் வழுவமைதி
- இட வழுவமைதி
- கால வழுவமைதி
- மரபு வழுவமைதி

16. **இட வழு எப்போது இடவழுவமைதியாகக் கொள்ளப்படும்? சான்று தருக?**

தன்மையினைப் படர்க்கை இடத்தில் கூறுவது இடவழுவமைதி ஆகும்.

**எ.கா:** "இந்த மாறன் ஒருநாளும் பொய் கூறமாட்டான்"

17. **மரபு வழுவமைதியை சில இலக்கியச் சான்றுடன் விளக்குக?**

"கத்துங் குயிலோசை - சற்றே வந்து
காதிற் படவேணும்" - பாரதியார்

18. **கால வழுவமைதி அமையும்படி சொற்றொடர் ஒன்றை அமைக்க?**

குடியரசுத் தலைவர் நாளை தமிழகம் வருகிறார்.

19. **திணை வழுவமைதிக்கு உன் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்விலிழுந்து சான்று தருக?**

என் புலி வந்தது என்று நாயை பார்த்துக் கூறுவது இதுவே என் வாழ்வில் நடந்த திணை வழுவமைதியாகும்.

20. **வழு - வழுவமைதி வேறுபடுத்துக?**

**வழு - திணை:**

செழியன் வந்தது.

**வழுவமைதி - திணை:**

என் அம்மை வந்தாள்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

***வழு - பால்:***

*கண்ணகி உண்டான்.*

***வழுவமைதி - பால்:***

*"வாடா இராசா, வாடா கண்ணா".*

***வழு - இடம்:***

*நீ வந்தேன்.*

***வழுவமைதி - இடம்:***

*இந்த மாறன் ஒருநாளும் பொய் கூறமாட்டான்.*

***வழு - காலம்:***

*நேற்று வருவான்.*

***வழுவமைதி - காலம்:***

*குடியரசுத் தலைவர் நாளை தமிழகம் வருகிறார்.*

***வழு - மரபு:***

*தென்னை மரங்கள் உள்ள பகுதியைத் தென்னந்தோட்டம்.*

***வழுவமைதி - மரபு:***

*"கத்துங் குயிலோசை - சற்றே வந்து*
*காதிற் படவேணும்" - பாரதியார்*

*21.* ***பால் வழுவமைதி அமையுமாற்றைச் சான்றுடன் விளக்குக.***

*"வாடா இராசா, வாடா கண்ணா" என்று தன் மகளைப் பார்த்துத் தாய் அழைப்பது பால் வழுவமைதி ஆகும். இங்கு உவப்பின் காரணமாக, பெண்பால் ஆண்பாலாகக் கொள்ளப்பட்டது.*



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

உரைநடை உலகம்

# இயல் – 5

## மொழிபெயர்ப்புக் கல்வி

1. ***வடமொழிக் கதைகளைத் தமிழில் படைக்கப்பட்ட காப்பியங்களை எழுதுக.***

   *பெருங்கதை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், வில்லிபாரதம் முதலிய சில காப்பியங்களும் வடமொழிக் கதைகளைத் தழுவிப் படைக்கப்பட்டவையே.*

2. ***மொழிபெயர்ப்பு என்றால் என்ன?***

   *"ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு" ஆகும்.*

3. ***மொழிபெயர்ப்புக்கு இந்திய அரசின் பங்கு யாது?***

   *ஒரு மொழியில் இருக்கும் நூல்களைப் பிற மொழியில் மொழிபெயர்த்தது; பல்வேறு மாநிலங்களில் இருந்த இருகின்ற எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள் ஆகியோரைப் பற்றிய நூல்களையும் வெளியிட்டது.*

4. ***ஒவ்வொரு தமிழரும் விரும்பிப் படிக்கும் நூலையும் மொழி பெயர்ப்பாளரையும் எழுதுக.***

   *வால்காவிலிருந்து கங்கை வரை' - கணமுத்தையா.*

5. ***ஒரு நாட்டின் பண்பாட்டையும் அறிவையும் எவற்றைக் கொண்டு மதிப்பிடுவர்?***

   *ஒரு நாட்டின் மொழிபெயர்ப்பு நூல்களின் எண்ணிக்கையைக் கொண்டு அந்நாட்டின் பண்பாட்டையும் அறிவையும் மதிப்பிடுவார்கள்.*

6. ***பாரதிக்கு உலக அளவில் விருதுகள் அளிக்கபடவில்லை - ஏன்?***

   *மகாகவியான பாரதியின் கவிதைகளும் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு பட்டிருந்தால் உலக அளவில் உயரிய விருதுகளும் ஏற்பும் கிடைத்திருக்கும்.*

7. ***ஒப்பிலக்கியங்களுக்குப் பயன்படுவது எது? ஏன்?***

   *ஒப்பு நோக்கிய சிந்தனை, வடிவம், உத்தி, மையக் கரு, பண்பாடு போன்ற பலவகைக் கூறுகளை எடைபோடவும் வளர்க்கவும் மொழிபெயர்ப்பு உதவுகிறது.*



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

8. **மொழிபெயர்ப்பு பயன்படும் சில துறைகளைப் பட்டியலிடுக?**
தொலைக்காட்சி. வானொலி, திரைப்படம், இதழ்கள்.

9. **மகாகவி பாரதி மொழிபெயர்த்த நூலை எழுதுக.?**
**பாரதியின் மொழிபெயர்ப்பு:**
- காட்சி, பொருட்காட்சி - Exibitiion
- இருப்புப் பாதை - East Indian Railways
- புரட்சி - Revolution
- தொழில் நிறுத்தி இருத்தல், வேலை நிறுத்தம், தொழில் நிறுத்தம் - Strike

10. **பயன்கலை - விளக்குக.**
உலகப்புகழ் பெற்ற அறிவியல் கண்டுபிடிப்புகளையும் இலக்கியப் படைப்புகளையும் அறிவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. கருத்துப் பகிர்வைத் தருவதால் மொழிபெயர்வைப் பயன்கலை என்று குறிப்பிடுவார்.

## இயல் – 5
### கவிதைப் பேழை
### நீதி வெண்பா

1. **அருளைப்பெருக்கி என்ற நீதிவெண்பா பாடலின் மையக்கருத்து யாது?**
கல்வியைப் போற்றி கற்க வேண்டும்.

2. **சதாவதானம் - குறிப்பு வரைக?**
‘சதம்’ என்றால் நூறு என்று பொருள். ஒருவரது புலமையையும் நினைவாற்றலையும் நுண்ணறிவையும் சோதிப்பதற்காக ஒரே நேரத்தில் நிகழ்த்தப்படும் நூறு செயல்களையும் நினைவில் கொண்டு விடையளித்தலே சதாவதானம்.

3. **எதைப் போற்றிக் கற்க வேண்டும் என நீதிவெண்பா கூறுகிறது?**
அருளினைப் பெருக்கி, அறிவைச் சீராக்கி, மயக்கம் அகற்றி, அறிவுக்குத் தெளிவு தந்து, உயிருக்கு அரிய துணையாய் இன்பம் சேர்ப்பது கல்வியே ஆகும். எனவே, அதைப் போற்றிக் கற்க வேண்டும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

4. **நீதிவெண்பாவின் ஆசிரியர் யார்?**
நீதிவெண்பாவின் ஆசிரியர் கா.ப.செய்குதம்பிப் பாவலர்.

5. **கல்வியின் சிறப்பு குறித்துக் கூறும் குறள் ஒன்று எழுதுக.**
"கற்க கசடற கற்பவை கற்றப்பின்
நிற்க அதற்கு தக"

கவிதைப் பேழை

## இயல் – 5

## திருவிளையாடற் புராணம்

1. **குலேசபாண்டின் யாரை அவமதித்தான்?**
குலேசபாண்டின் இடைக்காடனாரை அவமதித்தான்.

2. **இடைக்காடனாரின் நண்பன் யார்?**
இடைக்காடனாரின் நண்பன் கபிலர்.

3. **இறைவன் எங்கே தங்கினார்?**
இறைவன் வடதிரு ஆலாவாயில் சென்று தங்கினார்.

4. **பாண்டியன் அணிந்த மாலை யாது?**
பாண்டியன் அணிந்த மாலை வேப்பமாலை.

5. **அரசன் யாரை அவமதித்தான்?**
அரசன் இடைக்காடனாரை அவமதித்தான்.

6. **இறைவன் எவ்வடிவத்தை விடுத்து, எங்கே அமர்ந்தார்?**
இறைவன் ஞானமயமாகிய தம்முடைய இலிங்க வடிவத்தை மறைத்து வடக்கே வையையாற்றின் தென்பக்கத்தே ஒரு திருக்கோவிலை ஆக்கி அங்கே அமர்ந்தார்

7. **திருவிளையாடற்புராணத்தில் உள்ள காண்டங்கள் யாவை?**
**திருவிளையாடற்புராணத்தில் மூன்று காண்டங்கள் உள்ளன**
   - மதுரைக்காண்டம்,
   - கூடற்காண்டம்,
   - திருவாலவாய்க் காண்டம்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

8. **பரஞ்சோதி முனிவர் இயற்றிய நூல்கள் யாவை?**
**பரஞ்சோதி முனிவர் இயற்றிய நூல்கள்:**
- வேதாரண்யப்புராணம்,
- திருவிளையாடல் போற்றிக் கலிவெண்பா,
- மதுரை பதிற்றுப்பத்தந்தாதி.

9. **கடம்பவனம் குறிக்கும் செய்யுள் சொல் எது?**
கடம்பவனம் - நீபவனம்.

10. **சிறியோர் குற்றம் பொறுப்பது பெருமை - யார், யாரிடம் கூறியது?**
சிறியோர் குற்றம் பொறுப்பது பெருமை என்று மன்னன் இறைவனிடம் கூறியது

கற்கண்டு

## இயல் – 5 வினா, விடை வகைகள், பொருள்கோள்

1. **மொழியின் வளர்ச்சி எவ்வாறு தோற்றம் கொள்கிறது?**
மொழியின் வளர்ச்சி என்பது வினவுவதிலும் விடையளிப்பதிலும் கூட இருக்கிறது.

2. **வினா வகைகளைக் குறிப்பிடும் நன்னூல் நூற்பா எழுதுக?**
அறிவு அறியாமை ஐயுறல் கொளல் கொடை
ஏவல் தரும் வினா ஆறும் இழுக்கார்.
- நன்னூல், 385

3. **விடை வகைகளைக் குறிப்பிடும் நன்னூல் நூற்பா எழுதுக?**
"சுட்டு மறைநேர் ஏவல் வினாதல்
உற்ற(து) உரைத்தல் உறுவது கூறல்
இனமொழி எனும்எண் இறையுள் இறுதி
நிலவிய ஐந்தும்அப் பொருண்மையின் நேர்ப"
- நன்னூல், 385



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

4. **உதவும் பொருட்டு, உதவும் பொருட்டு வரும் வினா வகைகள் யாவை?**

உதவும் பொருட்டு, உதவும் பொருட்டு என்பது "கொடை வினா".

5. **வெளிப்படை வகைகள் யாவை?**

வெளிப்படை மூன்று வகைப்படும். அவை,

- சுட்டு விடை
- மறை விடை
- நேர் விடை

6. **குறிப்பு விடைகள் யாவை?**

குறிப்பு விடைகள் ஐந்து வகைப்படும். அவை,

- ஏவல் விடை
- வினா விடை (வினாதல் விடை)
- உற்றது உரைத்தல் விடை
- உறுவது கூறல் விடை
- இனமொழி விடை

7. **பொருள்கோள் என்றால் என்ன?**

செய்யுளில் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு சேர்த்தோ மாற்றியோ பொருள் கொள்ளும் முறைக்குப் 'பொருள்கோள்' என்று பெயர்.

8. **ஆற்றுநீர்ப் பொருள்கோளுக்கான நூற்பாவினை எழுதுக?**

'மற்றைய நோக்காது அடிதொறும் வான்பொருள்
அற்று அற்று ஒழுகும் அஃது யாற்றுப் புனலே'

- நன்னூல், 412

9. **கொண்டுகூட்டுப் பொருள்கோளுக்கான நூற்பாவினை எழுதுக?**

'யாபடி பலவினுங் கோப்புடை மொழிகளை
ஏற்புழி இசைப்பது கொண்டு கூட்டே'

- நன்னூல், 417



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

10. **நிரல்நிறைப் பொருள்கோள் வகைகள் யாவை?**

**நிரல்நிறைப் பொருள்கோள் இரு வகைகள்:**

- முறை நிரல்நிறைப் பொருள்கோள்,
- எதிர் நிரல்நிறைப் பொருள்கோள் - என இருவகைப்படும்.

உரைநடை உலகம்

## இயல் – 6 நிகழ்கலை

1. **கரகாட்டம் சங்க காலத் தொட்டே ஆடப்பட்டுவருகிறது. சரியா? சரி என்றால் சான்று தருக.**

**இக்கூற்று** : சரி

**சான்று** : சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய கரகாட்டம் என்ற ஆடலும் குறிப்பிடப்படுகிறது.

2. **அறுபடை வீடுகளில் ஆடப்படும் கலையைப்பற்றி எழுது?**

அறுபடை வீடுகளில் ஆடப்படும் கலை - தேவராட்டம். இது ஆண்கள் மட்டுமே ஆடும் ஆட்டம் இக்கலை வேட்டிக்கட்டியும்தலையிலும் இடையிலும் சிறுதுணி கால்களில் சலங்கை அணிந்தும் எளிய ஒப்பனையுடன் நிகழ்த்தப்படுகிறது.

3. **கா - என்பதன் பொருள் கூறுக.**

கா - என்பதற்குப் பாரந்தாங்கும் கோல் என்று பொருள்.

4. **தேவதுந்துபி - சிறுகுறிப்பு வரைக.**

உறுமி எனப் பொதுவாக அழைக்கப்படும் "தேவதுந்துபி" தேவராட்டத்திற்குரிய இசைக்கருவி.

5. **மராட்டியர் ஆட்சிக் காலத்தில் தஞ்சையில் ஆடப்பட்ட கலை எது? அக்கலை எப்பண்புகளைப் பின்பற்றி நிகழ்த்தபட்டது?**

மராட்டியர் ஆட்சிக் காலத்தில் தஞ்சையில் ஆடப்பட்ட கலை "பொய்கால் குதிரையாட்டம்" இக்கலை போலச் செய்தல் பண்புகளைப் பின்பற்றி நிகழ்த்தபடுகிறது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

6. **பக்தி இலக்கியத்திலும் நிகழ்கலை இடம்பெற்றிருக்கிறது என்பதற்கான சான்று தந்து நிறுவுக?**

"தகக தகதகக தந்தத்த தந்தகக
என்று தாளம்
பதலை திமிலைதுடி தம்பட்டமும் பெருக" - **திருப்புகழ்** - 143

7. **தமிழர்களின் வீரத்தை வெளிப்படுத்தும் நிகழ்கலைகளின் பெயர்களைப் பற்றி எழுதுக.**

தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலையாகத் திகழ்வது புலி ஆட்டமாகும்.

8. **உங்கள் கிராமங்களில் நடைபெறும் நிகழ்கலைகளின் பெயர்களைக் கூறுக.**

எங்கள் ஊரில் புலி ஆட்டம் மற்றும் தெருகூத்து நடைபெறும்.

9. **சமூக பண்பாட்டுத் தளமாக நிகழ்கலை விளங்குகிறது என்பதை நீ அறிந்த கலை வாயிலாக கூறுக?**

மனிதன் தன்னுடைய தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றிக் கொள்ள உருவாக்கிய கருவி பண்பாட்டு கலை தெருக்கூத்து.

10. **நிகழ்கலையின் நோக்கங்கள் யாவை?**

பழந்தமிழ் மக்களின் கலை அழகியல் புதுமை அறிவு சிந்தனையை மக்களுக்கு கூறுவது.

## இயல் – 6

### கவிதைப் பேழை

## பூத்தொடுத்தல்

1. **கலைகள் எதனை அழகுபடுத்துகின்றன?**

கலைகள் மனிதன் வாழ்வை அழகுபடுத்துகின்றன.

2. **அழகியல் எதனுடன் பிணைந்துள்ளது?**

அழகியல் மண்ணுயிர்கள் அனைத்தையும் தம் வாழ்வியல் சூழலுடன் பிணைந்து கொண்டுள்ளது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

3. **அழகுணர்ச்சி உடையவர்கள் யார்?**
தத்தி தாவும் குழந்தை முதல் தள்ளாடும் முதியவர் வரை யாவரும் அழகுணர்ச்சி உடையவர்கள்.

4. **பூத்தொடுத்தல் கவிதையின் மையக் கருத்து யாது?**
பூத்தொடுத்தல் கவிதையின் மையக் கருத்து "கலைவளர்த்தல்".

5. **நூலாக வேண்டியது எது எனக் கவிஞர் குறிப்பிடுகிறார்?**
நூலாக வேண்டியது மனம் என கவிஞர் உமா மகேஸ்வரி குறிப்பிடுகிறார்.

## இயல் – 6

### கவிதைப் பேழை

## முத்துக்குமரசாமி பிள்ளைத்தமிழ்

1. **பிள்ளைத்தமிழ் இருபாலருக்கும் பொதுவான பருவங்கள் யாவை?**
இருபாலருக்கும் பொதுவான பருவங்கள் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி.

2. **பிள்ளைத்தமிழ் - குறிப்பு வரைக.**
இதில் இறைவனையோ, தலைவரையோ, அரசனையோ பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடுவது.

3. **குமரகுருபரர் இயற்றிய நூல்கள் யாவை?**
கந்தர் கலிவெண்பா, மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக்கலம்பகம், நீதிநெறி விளக்கம், சகலகலாவல்லிமாலை, திருவாரூர் மும்மணிகோவை முதலான நூல்கள் இயற்றியுள்ளார்.

4. **காலில் அணியும் 2 அணிகலன்களை எழுதுக?**
காலில் அணியும் 2 அணிகலன்
சிலம்பு - பெண்கள் அணிவது
கிண்கிணி - ஆண்கள் அணிவது

5. **காதில் அணியும் 2 அணிகலன்களை எழுதுக?**
காதில் அணியும் 2 அணிகலன்
குண்டலம் - பெண்கள் அணிவது
குழை - ஆண்கள் அணிவது



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

6. **பதிந்து - பகுபத உறுப்பிலக்கணம் தருக?**

**பதிந்து = பதி + த்(ந்) + த் + உ**

**பதி** - பகுதி

**த்(ந்)** - சந்தி, 'ந்' ஆனது விகாரம்

**ந்** - இறந்தகால இடைநிலை

**உ** - வினையெச்ச விகுதி

7. **குமரகுருபரர் எம்மொழிகளில் புலமைமிக்கவர்?**
   - தமிழ்,
   - வடமொழி,
   - இந்துஸ்தானி

   ஆகிய மொழிகளில் குமரகுருபரர் புலமைமிக்கவர்

## இயல் – 6

## கவிதைப் பேழை

## கம்பராமாயணம்

1. **'திண்மையில்லை நேர்செறுந ரின்மையால்' இதில் கம்பர் அடையாளப்படுத்தும் கோசல நாட்டின் செய்தி என்ன?**

   நேருக்கு நேர் போர் புரிபவர் இல்லாததால், உடல் வலிமையை எடுத்துக்காட்ட வாய்ப்பில்லை.

2. **கம்பரைப் போற்றும் முதுமொழிகள் யாவை?**

   "கல்வியில் பெரியவர் கம்பர்", "கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்" போன்ற முதுமொழிகளுக்கு உரியவர் கம்பர்.

3. **விருத்தப்பாவிற்கு புகழ்பெற்றவர் யார்?**

   விருத்தப்பாவிற்கு புகழ்பெற்றவர் கம்பர்.

4. **கம்பர் இயற்றிய நூல்கள் யாவை?**

   **கம்பர் இயற்றிய நூல்கள்:**
   - சரசுவதி அந்தாதி,
   - சடகோபர் அந்தாதி,
   - திருக்கை வழக்கம்,



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- ஏரெழுபது,
- சிலை எழுபது

முதலிய நூல்களை இயற்றினார்.

5. **அழியாத அழகினை கொண்டவன் யார்?**
அழியாத அழகினை கொண்டவன் இராமன்.

6. **இராமனின் நிறத்தை வருணிக்க கம்பர் எந்தெந்த நிறத்தையெல்லாம் குறிப்பிடுகிறார்?**
இராமன் நிறம் மையோ?
   - பச்சை நிற மரகதமோ - பச்சை
   - மறிக்கின்ற நீலக் கடலோ? - நீலம்
   - கார் மேகமோ? - கருமை

   - என்று குறிப்பிடுகிறார்.

7. **'இடையாளொடும் இளையானொடும் போனான்' இத்தொடரில் கம்பர் யாரையெல்லாம் குறிப்பிடுகிறார்?**
**'இடையாளொடும் இளையானொடும் போனான்' இத்தொடரில் கம்பர்** குறிப்பிடுவது சீதையையும், இலக்குமனனையும் குறிப்பிடுகிறார்.

8. **எந்நாட்டில் கொடைக்கு இடமில்லை? ஏன்?**
கோசல நாட்டில் வறுமை சிறிதும் இல்லாததால், கொடைக்கு அங்கே இடமில்லை.

9. **காலனுக்குத் தூதரானவர் கையில் உறங்கப்போவது யார்?**
காலனுக்குத் தூதரானவர் கையில் உறங்கப்போவது கும்பகருணன்.

10. **கம்பர் எந்நாட்டைச் சேர்ந்தவர்?**
கம்பர் சோழ நாட்டைச் சேர்ந்தவர்.

11. **கம்பர் குறித்துப் பாரதியார் எவ்வாறு பெருமைப்படுகிறார்?**
'கம்பன் இசைத்த கவியெல்லாம் நான்' என்று பாரதி பெருமைப்படுகிறார்.

12. **சரயு ஆற்றை எவற்றோடு ஒப்புமைப்படுத்திக் கம்பர் வருணிக்கிறார்?**
ஓர் உயிர் பல உடல்களில் ஊடுருவி உலாவுவது போல் சராயு ஆறு பல இடங்களின் பாய்கிறது. (சராயு ஆற்றை உடலோடு ஒப்பிடுகிறார்)



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

13. **'ஆழ நெடுந்திரை ஆறு கடந்து இவர் போவாரோ?' இத்தொடரில் கம்பர் சுட்டும் ஆற்றின் பெயர் என்ன?**
'ஆழ நெடுந்திரை ஆறு கடந்து இவர் போவாரோ' இத்தொடரில் கம்பர் சுட்டும் ஆறு கங்கையாறு ஆகும்

14. **'ஏழைமை வேடன் இறந்திலன்' இத்தொடரில் குறிக்கப்படும் வேடன் யார்?**
'ஏழைமை வேடன் இறந்திலன்' இத்தொடரில் குறிக்கப்படும் வேடன் என்று பரதன் குறிப்பிடப்படுகிறார்.

15. **கம்பராமாயணப் பாடல்களின் சிறப்புகள் யாவை?**
கம்பராமாயணப் பாடல்கள் சந்தநயம் மிக்ககவை. அவற்றுள் அழகுணர்ச்சிமிக்க சில கவிதைகள் பாடப்பகுதியாக அமைந்துள்ளன.

கற்கண்டு

## இயல் – 6

## அகப்பொருள் இலக்கணம்

1. **பொருள் இலக்கணம் என்பது யாது?**
பொருள் என்பது ஒழுக்கமுறை. நம் தமிழர் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வாழ்வியலை அகம், புறம் என வகுத்தார்கள். இதனைப் பொருள் இலக்கணம் விளங்குகிறது.

2. **அகத்திணை என்றால் என்ன?**
அன்புடைய தலைவன் தலைவி இடையிலான உறவு நிலைகளைக் கூறுவது அகத்திணை.

3. **அன்பின் ஐந்திணைகள் யாவை?**
குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பனவே அன்பின் ஐந்திணைகளாகும்.

4. **முதற்பொருள் என்பது யாது?**
நிலமும் பொழுதும் முதற்பொருள் எனப்படும்.

5. **பொழுது எத்தனை வகைப்படும்? அவை யாவை?**
பொழுது, பெரும் பொழுது, சிறுபொழுது என இரு வகைப்படும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

6. **ஓராண்டின் ஆறு கூறுகள் - எழுதுக?**
**ஓராண்டின் ஆறு கூறுகள்:**
- கார் காலம்
- குளிர் காலம்
- முன்பனி காலம்
- பின்பனி காலம்
- இளவேனிற் காலம்
- முதுவேனிற் காலம்

7. **ஐவகை நிலத்திற்குரிய சிறுபொழுதுகள் இரண்டினை எழுதுக?**
ஐவகை நிலத்திற்குரிய சிறுபொழுதுகள் இரண்டு காலை, நண்பகல்

8. **குளிர் காலத்திற்குரிய மாதங்கள் யாவை?**
காலம் - ஐப்பசி, கார்த்திகை

9. **கவிதையில் உரிப்பொருளை எதன் பின்னணியில் அமைத்துப் பாடுவர்?**
கவிதையில் உரிப்பொருளை கருப்பொருள் பின்னணியில் அமைத்துப் பாடுவது நம் மரபு.

10. **கருப்பொருள் என்றால் என்ன?**
ஒரு நிலத்தின் தெய்வம், மக்கள், தொழில், விலங்கு இவையெல்லாம் கருப்பொருள்கள்.

11. **ஐந்து நிலத்திற்குரிய பறைகளை எழுதுக?**
**ஐந்து நிலத்திற்குரிய பறைகள்:**
- குறிஞ்சி - தொண்டகம்
- முல்லை - ஏறு கோட்பறை
- மருதம் - மணமுழா, நெல்லரிகினை
- நெய்தல் - மீன் கோட்பறை
- பாலை - துடி

12. **இரண்டு நிலத்திற்குரிய தெய்வங்கள் எழுதுக.**
**இரண்டு நிலத்திற்குரிய தெய்வங்கள்**
**குறிஞ்சி** - முருகன்
**முல்லை** - திருமால்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

13. **இரண்டு நிலத்திற்குரிய பொதுவாக அமையும் விலங்குகளை எழுதுக.**
**புலி**, கரடி, சிங்கம் - குறிஞ்சி
முயல், மான், **புலி** - முல்லை

14. **இந்திரனைத் தெய்வமாகக் கொண்ட திணை யாது? அதன் மக்கள் யாவர்?**
**இந்திரனைத் தெய்வமாகக் கொண்ட திணை** மருதம் அதன் மக்கள் உழவர், உழத்தியர் ஆவர்.

15. **எருமை, நீர்நாய் - எத்திணை?**
**எருமை, நீர்நாய்** மருத நிலத்திற்குறியது.

16. **குறிஞ்சி, பாலைக்குரிய தொழில்களை எழுதுக.**
**குறிஞ்சி, பாலைக்குரிய தொழில்கள்:**
குறிஞ்சி - தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல்
பாலை - வழிப்பறி, நிரை கவர்தல்.

17. **மருத நிலத்திற்குரிய கருப்பொருள்களை எழுதுக?**
**மருத நிலத்திற்குரிய கருப்பொருள்:**
- தெய்வம் - முருகன்
- மக்கள் - குறவன்,குறத்தி
- உணவு - மலைநெல்,தினை
- விலங்கு - புலி,கரடி,சிங்கம்

18. **பாலை நிலத்திற்குரிய கருப்பொருள்களை எழுதுக.**
**பாலை நிலத்திற்குரிய கருப்பொருள்கள்:**
- மரம் - இழுப்பை,பாலை
- பறவை - புறா,பருந்து
- ஊர் - குறும்பு
- நீர் - வற்றிய சுனை,கிணறு
- பறை - துடி



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

19. **ஐவகை நிலத்திற்குரிய மலர்களை எழுதுக.**
**ஐவகை நிலத்திற்குரிய மலர்கள்:**

- குறிஞ்சி - குறிஞ்சி, காந்தள்
- முல்லை - முல்லை, தோன்றி
- மருதம் - செங்கழுநீர், தாமரை
- நெய்தல் - தாழை, நெய்தல்
- பாலை - குரவம், பாதிரி

20. **நெய்தல், முல்லைக்குரிய பண்களை எழுதுக.**

- நெய்தல் - செவ்வழிப்பண்
- முல்லை - முல்லைப்பண்

உரைநடை உலகம்

## இயல் – 7

## சிற்றகல் ஒளி (தன் வரலாறு)

1. **'சிலம்புச் செல்வர்' என்றழைக்கப்படுபவரின் இயற்பெயர் யாது?**
'சிலம்புச் செல்வர்' என்றழைக்கப்படுபவரின் இயற்பெயர் ஞானபிரகாசம் என்பதாகும்.

2. **சிற்றக்கல் ஒளி என்னும் உரைநடைப்பகுதியின் வடிவம் யாது? (சொற்பொழிவு, தன்வரலாறு, வருணனை)**
தன்வரலாறே சிற்றக்கல் ஒளி என்னும் உரைநடைப்பகுதியின் வடிவமாகும்.

3. **ஒருவன் அறிவு விளக்கம் பெறுவதற்குள்ள இரண்டு வழிகளாக ம.பொ.சி கூறுவன யாவை ?**
ஒருவன் அறிவு விளக்கம் பெறுவதற்குள்ள இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று கல்வி; மற்றொன்று கேள்வி என்று மா.பொ.சி. கூறுகிறார்.

4. **தமிழகத்தின் எல்லைகளாக வேங்கடமலை, குமரிமுனை இருந்தது பற்றி கூறும் தமிழிலக்கியங்கள் யாவை?**
புறநானூறும் சிலப்பதிகாரமும் தமிழகத்தின் எல்லைகளாக வேங்கடமலை, குமரிமுனை இருந்தது பற்றி கூறும் தமிழிலக்கியங்களாகும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

5. ***ஞானப்பிரகாசம் யாரால், எவ்வாறு அழைக்கப்பட்டார்?***
*ஞானபிரகாசம் சரபையர் என்ற முதியவர் ஒருவரின் பெயரை மாற்றி சிவஞானம் என்றே அழைத்தார்.*

6. ***மா.பொ.சி. என்பதன் விரிவாக்கம் யாது?***
***மா.பொ.சி. என்பதன் விரிவாக்கம்:***
***(மா.பொ.சி)*** *-மயிலாப்பூர் பொன்னுசாமி சிவஞானம் என்பதாகும்.*

7. ***மா.பொ.சி. அவர்கள் எழுதிய தன்வரலாற்று நூலின் பெயர் என்ன?***
*'எனது போராட்டம்' என்பதே மா.பொசி. எழுதிய தன்வரலாற்று நூலாகும்.*

8. ***சிலம்புச் செல்வருக்கு தமிழக அரசு செய்த சிறப்பு யாது ?அவை எங்கெங்குள்ளன?***
***சிலம்புச் செல்வருக்கு தமிழக அரசு செய்த சிறப்பு:***
*மா.பொ.சி.க்கு தமிழக அரசு சிலை அமைத்தது. அவை திருத்தணியிலும், சென்னை தியாகராய நகரிலும் அமைத்துள்ளது.*

9. ***1906ஆம் ஆண்டில் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வுகள் இரண்டினைக்கூறு?***
   - *1906 - மா.பொசி. பிறந்தார்.*
   - *1906 - காந்தியடிகள் சத்தியாகிரகம் என்ற அறப்போர் முறையைத் தென்னாப்பிரிக்காவில் தொடங்கினார்.*
   - *1906 - வ.உ.சிதம்பரனார் சுதேசி கப்பல் நிறுவனத்தை தொடங்கினார்*



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

கவிதைப் பேழை

## இயல் – 7

## ஏர் புதிதா?

1. **பொன் ஏர் பூட்டுதல் பற்றி நீ அறிந்த கருத்துகள் இரண்டனை கூறுக?**
பொன்னேர் பூட்டினால் வேளாண்மை செழிக்கும் மானுடம் தழைக்கும்.

2. **முதல் மழை - நான்கு வரிகளுக்கு மிகாமல் குறுங்கவிதை படைக்க?**

உளவனின் கண்ணீரில் உதித்தவளே
பருகும் தண்ணீராய் பிறந்தவளே
பசுமைதனின் வயிறு நிரப்பி
ஆனந்த படுத்த வந்தவளே!
நீயும் ..........!அதியமானே (உழவனும்) நானும் (மழையும்)

3. **புதிது என்று எவற்றைக் கவிஞர் குறிப்பிடுகிறார்?**
**புதிது என்று கவிஞர் குறிப்பிடுவது:**
   - நாள் புதிது
   - நட்சத்திரம் புதிது
   - மனஊக்கம் புதிது
   - உரம் புதிது

4. **புதிதன்று என்று எவற்றைக் கவிஞர் குறிப்பிடுகிறார்?**
**புதிதன்று என்று கவிஞர் குறிப்பிடுகிறார்:**
   - ஏர் புதிதன்று
   - வயல் புதிதன்று
   - ஏறும் புதிதன்று
   - கரையும் புதிதன்று

5. **தமிழர் பண்பாட்டின் மகுடம் எது?**
பொன்னேர் பூட்டுதல் தமிழர் பண்பாட்டின் மகுடம் ஆகும்.

6. **"காட்டைக் கீறுவோம்" இதில் காடு என்று குறிப்பிப்பிடப்படுவது?**
'காட்டைக் கீறுவோம்' இதில் காடு என்று குறிப்பிப்பிடப்படுவது வயல்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

7. **மாட்டை ஏரில் பூட்டினால் என்னவெல்லாம் நடக்கும் என்று கவிஞர் குறிப்பிடுகிறார்?**

- மண்புரளும்,
- மழை பொழியும்,
- நிலம் சிலிர்க்கும்,
- நாற்று நிமிரும்।

மாட்டை ஏரில் பூட்டினால் என்னவெல்லாம் நடக்கும் என்று கவிஞர் குறிப்பிடுகிறார்

8. **கு.ப.ரா.வின் படைப்புகள் யாவை?**

**கு.ப.ரா.வின் படைப்புகள்:**

- ஏர் புதிதா?
- அகலிகை
- ஆத்மசிந்தனை

9. **கு.ப.ரா. எங்கு எப்போது பிறந்தார்?**

கு.பா.ரா. கும்பகோணத்தில் 1902-ஆம் ஆண்டில் பிறந்தார்.

10. **கு.ப.ரா. பணியாற்றிய இதழ்களின் பெயர்களைத் தருக.**

**கு.ப.ரா. பணியாற்றிய இதழ்கள்:**

- தமிழ் நாடு
- பாரத மணி
- பாரத தேவி
- கிராம ஊழியன்
-



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

இயல் – 7

கவிதைப் பேழை

## மெய்க்கீர்த்தி

1. ***அரசர்கள் கல்லில் ஏன் செதுக்கினர்?***
   *அரசர்கள் தங்கள் வரலாறும் பெருமையும் காலம் கடந்தும் நிலைக்க விரும்பினார்கள்; அழியாத வகையில் அதனைக் கல்லில் செதுக்கினார்கள்.*

2. ***மெய்க்கீர்த்தி எவ்வாறு எவ்வாறு உருவானது.***
   *மன்னரை புகழ்ந்து இலக்கிய நயம்பட எழுதப்படும் வரிகள் இவை புலவர்களால் எழுதப்பட்டுக் கல்தச்சர்களால் கல்லில் பொறிக்கப்பட்டவை.*

3. ***சோழனின் ஓர் உருவம் - விளக்குக.***
   *இந்திரன் முதலாகத் திசைபாலகர் எட்டுபேரும் ஒருருவம் பெற்றதுபோல் ஆட்சி செலுத்தினான் சோழன்.*

4. ***சோழன் நாட்டில் எவை பிணிக்கப்படுகின்றன?***
   *சோழன் நாட்டில் யானைகள் மட்டுமே பிணிக்கப்படுகின்றன.*

5. ***சோழன் நாட்டில் எவை புலம்புகின்றன?***
   *சோழன் நாட்டில் சிலம்புகள் மட்டுமே புலம்புகின்றன.*

6. ***சோழன் நாட்டில் எக்கண்கள் மருள்கின்றன?***
   *சோழன் நாட்டில் இளமான்களின் கண்களே மருள்கின்றன.*

7. ***மெய்கீர்த்தி யாரைப் பற்றிப் பேசுகிறது?***
   *இரண்டாம் இராசராச சோழனைப் பற்றியும் நாட்டின் வளத்தையும் ஆட்சிச் சிறப்பையும் பற்றி பேசுகிறது.*

8. ***மெய்கீர்த்தியின் முதல் பகுதி எதைப்பற்றி இருக்கும்?***
   *மெய்கீர்த்தியின் முதல் பகுதி மன்னரைப் பற்றிப் புகழ்ந்து இலக்கிய நயம்பட எழுதப்பட்டிருக்கும்.*

9. ***கல்லில் பொறிப்பவர்களின் பெயர் என்ன?***
   *கல்லில் பொறிப்பவர்களின் பெயர் கல்தச்சர்.*

10. ***மெய்கீர்த்தியில் உள்ள அடிகளின் எண்ணிக்கை யாது?***
    *மெய்கீர்த்தியில் 91 அடிகள் உள்ளன.*



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

கவிதைப் பேழை

# இயல் – 7 சிலப்பதிகாரம்

1. **ஐம்பெருங்காப்பியங்கள் யாவை?**
**ஐம்பெருங்காப்பியங்கள்:**
   - சிலப்பதிகாரம்
   - மணிமேகலை
   - சீவகசிந்தாமணி
   - வளையாபதி
   - குண்டலகேசி

2. **சிலப்பதிகாரத்தின் அமைப்பு குறித்து எழுதுக?**

| | | | | |
|---|---|---|---|---|
| காண்டங்கள் | - (3) | 1 புகார் | 2. மதுரை | 3. வஞ்சி |
| காதைகள் | - (30) | 1 புகார்-10 | 2 மதுரை-13 | 3. வஞ்சி- 7 |

3. **சிலப்பதிகாரத்திற்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?**
**சிலப்பதிகாரத்திற்கு வழங்கும் வேறு பெயர்கள்:**
   - முத்தமிழ்க் காப்பியம்
   - குடிமக்கள் காப்பியம்
   - ஒற்றுமைக் காப்பியம்
   - உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்

4. **இரட்டைக் காப்பியங்கள் என அழைக்கப்படுவது எவை? ஏன்?**
மணிமேகலைக் காப்பியத்துடன் கதைத்தொடர்பு கொண்டிருப்பதால் இவையிரண்டும் இரட்டைக்காப்பியங்கள் எனவும் அழைக்கப் பெறுகின்றன.

5. **அடிகள் நீரே அருளுக - யார் யாரிடம் கூறியது?**
சீத்தலைச்சாத்தனார் கோவலன் கண்ணகி கதையைக் கூறி, 'அடிகள் நீரே அருளுக' என்றதால் இளங்கோவடிகளும் 'நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச்செய்யுள்' என இக்காப்பியம் படைத்தார் என்பார்.
**சீத்தலைச்சாத்தனார் இளங்கோவடிகளிடம் கூறியது.**



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

6. **உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் - விளக்குக?**
   - உரைப்பாட்டு மடை என்பது சிலப்பதிகாரத்தில் வரும் தமிழ்நடை. இது உரைநடைப்பாங்கில் அமைந்திருக்கும் பாட்டு.
   - வாய்க்காலில் பாயும் நீரை வயலுக்குத் திருப்பிவிடுவது மடை. உரை என்பது பேசும் மொழியின் ஓட்டம். இதனைச் செய்யுளாகிய வயலில் பாய்ச்சுவது உரைப்பாட்டு மடை.

7. **மருவூர்ப்பாக்க வீதியில் விற்கப்பட்ட மணப்பொருள்கள் யாவை?**
   **மருவூர்ப்பாக்க வீதியில் விற்கப்பட்ட மணப்பொருள்கள்:**
   - மணச்சாந்து
   - பூ
   - நறுமணப் புகைப்பொருள்கள்
   - அகில்

8. **பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்**
   **கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும் - இவ்வடிகளில் இளங்கோவடிகள் கூறும் கருத்தினை விளக்குக?**
   இங்கு பட்டு, பருத்தி நூல், முடி இவற்றினைக் கொண்டு அழகாகப் பின்னிக் கட்டும் கைத்தொழில் வல்லுநரான நெசவாளர் வாழும் வீதிகள் உள்ளன.

9. **"கூலம் குவிந்த கூல வீதியும்" - பொருள் எழுதுக.**
   "கூலம் குவிந்த கூல வீதியும்" - பொருள் எட்டுவகைத் தானியங்களும் குவிந்து கிடக்கும் கூலக்கடைத் தெருக்களும் உள்ளன என்று பொருள்..

10. **மருவூர்ப்பாக்கத்தில் உள்ள வீதிகள் யாவை?**
    **மருவூர்ப்பாக்கத்தில் உள்ள வீதிகள்:**
    - வணிக வீதிகள்
    - நெசவாளர் வாழும் வீதிகள்
    - கூலக்கடை வீதிகள்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

கற்கண்டு

# இயல் – 7 புறப்பொருள் இலக்கணம்

1. **புறத்திணை என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்?**
   புறம் பற்றிய நெறிகளைக் கூறுவது புறத்திணை. புறத்திணைகள், வெட்சி முதலாகப் பன்னிரண்டு வகைப்படும்

2. **ஆநிரை எவ்வாறாகக் கருதப்படுகிறது?**
   மக்கள் சிறு குழுக்களாக வாழ்ந்த காலத்தில், ஆநிரைகளைச் (மாடுகளை) சொத்தாகக் கருதினர்.

3. **இட்லிப்பூ - விவரி.**
   அழகுச்செடியாக வீட்டுத் தோட்டங்களிலும் பூங்காக்களிலும் வளர்க்கப்படுகிற சிவந்த நிறமுடைய வெட்சிப்பூ, இட்லிப்பூ என்று அழைக்கப்படுகிறது.

4. **கொட்டைக் கரந்தைப் பூவைப் பற்றி எழுதுக.**
   சிறிய முட்டை வடிவில் கொத்தாகப் பூக்கக் கூடிய கரந்தை ஒரு சிறிய செடி. நறுமணம் மிக்க இது செம்மை, நீலம், இளஞ்சிவப்பு, நீலம் கலந்த சிவப்பு ஆகிய நிறங்களில் பூக்கின்றது. இதனைக் 'கொட்டைக் கரந்தை' என்றும் கூறுவர்.

5. **வஞ்சிப் பூவைப் பற்றி எழுதுக.**
   பளபளப்பான, மெல்லிய பூவின் இதழ்களில் வெள்ளிய பஞ்சு போன்ற நுண்மயிர் அடர்ந்துள்ளது வஞ்சி.

6. **கோட்டை எதற்காகக் கட்டப்பட்டது?**
   மண்ணைக் காக்கக் கோட்டைகள் கட்டப்பட்டன.

7. **காஞ்சிப் பூ - விவரி.**
   கொத்துக் கொத்தாகப் பூக்கும் நீலநிற மலர்கள் கொண்ட அழகான மணமுள்ள காஞ்சி என்பது ஒருவகைக் குறுமரம்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

8. **நொச்சிப்பூ பற்றி எழுதுக.**
மருத நிலத்துக்குரிய நொச்சி, கொத்துக் கொத்தான நீலநிறப்பூக்கள் கொண்டது. இதில் மணிநொச்சி, கருநொச்சி, மலைநொச்சி, வெண்ணொச்சி எனப் பலவகைகள் உள்ளன.

9. **உழிஞைப் பூ பற்றி விவரி.**
மாற்றரசனின் கோட்டையைக் கைப்பற்ற உழிஞைப் பூவைச் சூடிய தன் வீரர்களுடன் அதனைச் சுற்றி வளைத்தல் உழிஞைத்திணை.

10. **தும்பைப்பூ படம் வரைக.**




11. **வாகைப்பூ - விவரி.**
மங்கிய வெண்ணிற நறுமணம் கொண்ட கொத்துக் கொத்தாக மலரும் வாகை பூ.

12. **பாடாண் திணை யாருக்கானது?**
பாடுவதற்குத் தகுதியுடைய ஓர் ஆளுமையாளரின் கல்வி, வீரம், செல்வம், புகழ், கருணை முதலியவற்றைப் போற்றிப் பாடுவது, பாடாண்திணை (பாடு+ஆண்+திணை = பாடாண்திணை).

13. **பொதுவியல் திணைகள் யாவை?**
வெட்சி முதல் பாடாண்வரை உள்ள புறத்திணைகளில் பொதுவானவற்றையும், அவற்றுள் கூறப்படாதனவற்றையும் கூறுவது, பொதுவியல் திணை.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

உரைநடை உலகம்

# இயல் – 8

## சங்க இலக்கியத்தில் அறம்

1. **மகிழ்ச்சிப்பெருக்கில் மனிதன் திளைக்க எதனை ஏற்கவேண்டும்?**
மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்க வேண்டும் என்றால் அனைத்தையும் ஊடுருவிச் செல்லும் பொதுவிதியான அறத்தை மனிதன் ஏற்க வேண்டும்.

2. **சங்கம் மருவிய காலத்தை எவ்வாறு அழைப்பர்?**
சங்க காலத்திற்கு பிந்தைய அற இலக்கியங்களின் காலத்தை அறநெறிக்காலம் என்பர்

3. **கவிதைப் பற்றி அர்னால்டின் கருத்து யாது?**
'கவிதை வாழ்க்கையின் திறனாய்வு' என்று திறனாய்வாளர் ஆர்னால்டு கூறுகிறார்.

4. **ஆய் பற்றிய புறநானூற்றுப் பாடலை எழுது?**
"இம்மைச் செய்தது மறுமைக்கும் ஆம்என்னும்
அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்" - புறம்.

5. **அறத்தின் குறியீடுகள் யாவை?**
செங்கோலும் வெண்கொற்றாக்குடையும் அறத்தின் குறியீடுகள் ஆகும்.

6. **அரசனின் கடமை யாது?**
நீர்நிலைப பெருக்கி நிலவளம் கண்டு உணவுப் பெருக்கம் காண்பதும் அதனை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதும் அரசனின் கடமையாகச் சொல்லப்பட்டது.

7. **அமைச்சரின் கடமை யாது?**
"நன்றும் தீதும் ஆய்தலும் அன்பும் அறனும் காத்தலும் அமைச்சர் கடமை" என்கிறது மதுரைக்காஞ்சி.

8. **அறநெறி அவையம் இருந்த இடங்கள் யாவை?**
**அறநெறி அவையம் இருந்த இடமும் நூலும்:**
   - உறையூர் - புறநானூறு
   - மதுரை - மதுரைக்காஞ்சி



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

9. ***யாரை எதிர்த்து போர் செய்யக்கூடாது?***
*போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்து போர் செய்யக்கூடாது.*

10. ***யாருக்கு போரால் தீங்கு வரக்கூடாது?***
*போரின் கொடுமையில் இருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்கு போரால் தீங்கு வரக்கூடாது.*

11. ***ஆவூர் மூலங்கிழாரின் போர் குறித்த கருத்து யாது?***
*தம்மைவிட வலிமையில் குறைந்தவரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிலார் குறிப்பிட்டிருக்கிறார்.*

12. ***உண்மையான மகிழ்ச்சிக் குறித்துப் பாடம் வழி விளக்குக?***
*ஒரு மனிதன் தன்னுடைய மகிழ்ச்சியை மறந்து மற்றவர் மகிழ்ச்சியை நாடுவதுதான் உண்மையான மகிழ்ச்சி.*

13. ***செல்வத்தின் பயன் குறித்து நக்கீரர் கருத்து யாது?***
*செல்வத்தின் பயனே ஈதல்*
*துய்ப்பேம் எனினே தப்புந பலவே'*
*- புறம் (8-189:7)*
*என்றார் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்.*

14. ***கொடைப்பதிவைக் குறிப்பிடும் நூல்கள் யாவை?***
*சிறுபாணாற்றுப்படை, ஆற்றுப்படை இலக்கியங்கள், பதிற்றுப்பத்து, புறநானூறு ஆகியன கொடைப்பதிவைக் குறிப்பிடும் நூல்கள் ஆகும்.*

15. ***கொடைப் பெருமைகள் யாவை?***
*அரியன என்று கருதாது, தயங்காது கொடுத்தலும் ஈதலால் வரும் இழப்புக்கு வருந்தாமையும் நாள்தோறும் கொடுத்தலும் கொடைப் பெருமைகளாகப் பேசப்படுகின்றன.*

16. ***வள்ளல்கள் எவ்வாறு போற்றப்படுகின்றனர்?***
*வள்ளல்கள் "இல்லோர் ஒக்கல் தலைவன்", "பசிப்பினி மருத்துவன்" என்றெல்லாம் வள்ளல்கள் போற்றப்பட்டனர்.*



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

17. **கொடை வள்ளல்கள் நான்கின் பெயரைப் பாடியவர்களுடன் குறிப்பிடுக?**
**கொடை வள்ளல்கள் பெயர் பாடியவர்களுடன்:**

- பெருஞ்சாத்தன் - நக்கீரர்
- அதியமான் - ஔவையர்
- சேரலாதன் - நச்செள்ளையார்
- பேகன் - பரணர்
- குமணன் - பெருந்தலைச் சாத்தனார்
- திருமுடிக்காரி - கபிலர்

18. **உதவியாண்மை - பொருள்?**
உதவியாண்மை - உதவி செய்தல் என்று ஈழத்து பூதன் தேவனார் குறிப்பிடுகிறார்.

19. **உண்மையான செல்வம் குறித்து நல்வேட்டனார் கருத்து யாது?**
'உண்மையான செல்வம் என்பது பிறர் துன்பம் தீர்ப்பதுதான்'என்கிறார் நல்வேட்டனார்.

20. **சான்றோர் செல்வம் என்று தொடங்கும் பாடலை எழுது?**
"சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கண் செல்வம் செல்வம் என்பதுவே"
- நற்றிணை (210)



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

கவிதைப் பேழை

## இயல் – 8 ஞானம்

1. ***சாளரத்தின் கதவுகள் இல்லையெனில் என்ன நிகழும்?***
*சாளரத்தின் கதவுகள் இல்லையெனில் காற்றினால் தெருப்புழுதிகள் வந்து நிரம்பும்.*
2. ***காற்றை அடைப்பது எது?***
*சன்னலின் கதவுகளே காற்றை அடைக்கும்.*
3. ***எது மண் வீடு கட்டும்?***
*கரையானே மண் வீட்டினைக் கட்டும்.*
4. ***காலக்கழுதை என்னவானது?***
*காலக்கழுதை கட்டெறும்பானது.*
5. ***எவை ஓய்வதில்லை?***
*அறப்பணி என்றும் ஓய்வதில்லை ஓய்ந்துவிட்டால் உலகமே இல்லை.*

கவிதைப் பேழை

## இயல் – 8 காலக்கணிதம்

1. ***கண்ணதாசனின் இயர் பெயர் என்ன?***
*'முத்தையா' என்னும் இயற்பெயரைக் கொண்டவர் கண்ணதாசன்.*
2. ***புவியின் புகழுடைய தெய்வம் யார்?***
*கவிஞனாகிய நானே புவியின் புகழுடைய தெய்வம் என கண்ணதாசன் குறிப்பிடுகிறார்.*
3. ***கவிஞனின் தொழிலும் வேலையும் என்ன?***
*உலகில் நல்லவற்றை பாராட்டுவதும் தவறானவற்றை எதிர்ப்பதும் என் வேலை.*
4. ***முத்தொழிலைச் செய்பவர் எவரெவர்?***



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

படைத்தல், காத்தல், அழித்தல் இவையாவும் இறைவனும் கவிஞனுமான யானுமே முத்தொழிலைச் செய்கிறோம்.

5. ***கவிஞன் எப்படி இருக்கக் கூடாது?***
ஆட்சி அதிகாரத்துக்கு பயப்படுகிறவர்களாகவும் செல்வர் கையில் அகப்படுகிறவர்களாகவும் கவிஞன் இருக்கக் கூடாது.

6. ***கவிஞன் எப்படி இருக்க வேண்டும்?***
பாசமும் பற்றுதலும் மிகுத்தவனாகவும் ஆசைத்தருவன அனைத்தும் பற்றுவனாகவும் கவிஞன் இருக்க வேண்டும்.

7. ***உலகின் மகத்துவம் என்ன?***
நிலையற்ற உலகின் மாற்றங்களின் மகத்துவம் அறிவேன்.

8. ***எவர் மாறுவர்? எவை மாறும்?***
உலகில் தலைவர்கள் மாறுவர், அரசாங்கம் மாறும்.

9. ***நானே தொடக்கம் நானே முடிவு - யார்?***
நானே தொடக்கம் நானே முடிவு என்று கவிஞர்களை கண்ணதாசன் கூறுகிறார்.

10. ***கண்ணதாசன் எழுதிய முதல் திரைப்படப்பாடல் எது?***
"கலங்காதிரு மனமே" கண்ணதாசன் எழுதிய முதல் திரைப்படப்பாடல் ஆகும் .



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

கற்கண்டு

## இயல் – 8

## பா – வகை, அலகிடுதல்

1. **எழுத்து, சீர், தொடை, தளை - விடுபட்ட யாப்பு உறுப்புகளை எழுதுக.**
   - எழுத்து
   - அசை
   - சீர்
   - தளை
   - அடி
   - தொடை

2. **ஒவ்வொரு பாக்களையும் எவ்வாறு கண்டடையலாம்?**
   ஒவ்வொரு பாக்களையும் அவற்றின் ஓசைகளைக் கொண்டே அறியலாம்.

3. **பாவின் ஓசைகள் நான்கினை எழுது?**
   **பாவின் ஓசைகள் நான்கு:**
   - செப்பல்
   - அகவல்
   - துள்ளல்
   - தூங்கல்

4. **வெண்பாவில் அமைந்த நூல்களை எழுதுக?**
   செப்பலோசை வெண்பாவிற்குரியது. திருக்குறளும் நாலடியாரும் வெண்பாவில் அமைந்துள்ளன.

5. **மணிமேகளையும் சீவக சிந்தாமணியும் எவ்வகை பாக்கள்?**
   மணிமேகளையும் சீவக சிந்தாமணியும் அகவற்பாவில் அமைந்தவை ஆகும்.

6. **துள்ளல் ஓசை எவ்வாறாக இருக்கும்?**
   **துள்ளல் ஓசை:**
   கன்று துள்ளினாற்போலச் சீர்தோறுந் துள்ளிவரும் ஓசை. அதாவது தாழ்ந்து உயர்ந்து வருவது துள்ளலோசை.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

7. **வெண்பவின் வகைகள் யாவை?**
**வெண்பவின் ஐந்து வகைகள்:**
- குறள் வெண்பா
- இன்னிசை வெண்பா
- சிந்தியல் வெண்பா
- ப∴றொடை வெண்பா
- நேரிசை வெண்பா

8. **ஆசிரியப்பாவின் வகைகள் யாவை?**
**ஆசிரியப்பாவின் நான்கு வகைகள்:**
- நேரிசை ஆசிரியப்பா
- நிலைமண்டில ஆசிரியப்பா
- இணைக்குறள் ஆசிரியப்பா
- அடிமறி மண்டில ஆசிரியப்பா

9. **வெண்பாவின் தளைகள் யாவை?**
**வெண்பாவின் தளைகள்:**
வெண்பாவில் இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை ஆகியன மட்டும் பயின்று வரும்.

10. **ஆசிரியப்பா எவ்வாறாக முடியும்?**
ஆசிரியப்பா ஏகாரத்தில் முடித்தல் சிறப்பு.

11. **அலகிடுதல் என்றால் என்ன?**
சீரைப் பிரித்து அசைப் பார்த்து, அசைக்கேற்ற வாய்பாடு காணுதல் அலகிடுதல் எனப்படும்.

12. **அலகிடுதலில் அமையும் கடைச்சீர்களுக்கான வாய்பாடு எழுதுக?**
**ஈற்றுச் சீரின் வாய்பாடு:**
- நேர் - நாள்
- நிரை - மலர்
- நேர்பு - காசு
- நிரைபு - பிறப்பு



www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

13. **நிரை நிரை நேர் - சான்று தருக?**
நிரை நிரை நேர் - உடுப் - பதா - உம்

14. **நேர் நிரைபு - சான்று தருக?**
நின்றான் இரவு - நேர் நிரைபு

15. **செந்தமிழ் - வாய்பாடு எழுதுக.**
செந் - தமிழ் நேர் நிரை.

உரைநடை உலகம்

## இயல் – 9

## ஜெயகாந்தம் (நினைவு இதழ்)

1. **ஜெயகாந்தன் படைப்புகளில் கலந்துள்ளவை எவை?**
ஜெயகாந்தன் படைப்புகளில் கருத்தாழமும் வாசகச் சுவைப்பும் கலந்துள்ளது.

2. **சமகால எழுத்தை ஜெயகாந்தன் எழுதினாரா? கூற்றை ஆய்க.**
சமகால மொழியில் சமகால உணர்வில் தந்தவர் ஜெயகாந்தன்.

3. **ஜெயகாந்தன் பெற்ற விருதுகளை எழுதுக?**
**ஜெயகாந்தன் பெற்ற விருதுகள்:**
    - குடியரசுத் தலைவர் விருது (உன்னைப்போல் ஒருவன் - திரைப்படம்)
    - சாகித்திய அகாதெமி விருது - சில நேரங்களில் சில மனிதர்கள் (புதினம்)
    - சோவியத் நாட்டு விருது (இமயத்துக்கு அப்பால்)
    - ஞானபீட விருது
    - தாமரைத்திரு விருது

4. **ஜெயகாந்தன் எழுதுவதற்குக் காரணமாக இருந்தவை எவை?**
**ஜெயகாந்தன் எழுதுவதற்குக் காரணமாக இருந்தவை:**
    - தூண்டுதலும் இலட்சியமும்
    - நான் எழுதுவதற்கு முழுக்க முழுக்க வாழ்க்கையில் இருந்து நான் பெறும் கல்வியின் விளையும் எனது தனி முயற்சியின் பயனுமாகும்.

5. ***ஜெயகாந்தன் எதற்காக எழுதுகிறார்?***
*கலைத்தன்மைக்கு எந்தவித குறைவும் வராமல், கலாதேவியின் காதற் கணவனாகவும் சமுதாயத் தாயின் அன்புப் புதல்வனாகவும் இருந்து நான் எழுதுகிறேன்.*

6. ***கச்சிதமான உருவம், கனமான உள்ளடக்கம் - யார் யாரைக் கூறியது?***
*கச்சிதமான உருவம், கனமான உள்ளடக்கம் என்று வாசகர்கள் ஜெயகாந்தனைக் கூறியது.*

7. ***ஜெயகாந்தன் ஏன் அரசியலுக்கு வரவில்லை?***
*துவேஷத்தைப் பரப்புவது, அவருடைய இயல்புக்கு சற்றும் ஒவ்வாதது. அவர் அரசியலில் தொடர்ந்து பங்கு பெறாமல் இதுகூட காரணமாக இருந்திருக்கலாம்.*

8. ***ஜெயகாந்தன் மொழிபெயர்த்த நூல்கள் எழுதுக?***
***ஜெயகாந்தன் மொழிபெயர்த்த நூல்கள்:***
   - *வாழ்விக்க வந்த காந்தி (பிரெஞ்சு மொழியில் வந்த காந்தி வாழ்க்கை வரலாற்றின் தமிழாக்கம்)*
   - *ஒரு கதாசிரியனின் கதை (முன்சி பிரெம்சந்தின் வாழ்க்கை வரலாறு)*

9. ***ஜெயகாந்தன் எப்படைப்புகள் திரைப்படங்கள் ஆகின?***
   - *சில நேரங்களில் சில மனிதர்கள்*
   - *ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்*
   - *ஊருக்கு நூறுபேர்*
   - *உன்னைப் போல் ஒருவன்*
   - *யாருக்காக அழுதான்*

10. ***ஜெயகாந்தனின் கவிதையை எழுதுக.***
*"எண்ணமும் எழுத்தும் உயர்ந்திருக்கும் – ஏழை*
*கண்ணீரும் பாடலிலே கலந்திருக்கும்*
*பண்ணொடு சந்தமும் பாய்ந்து வரும் – பழைய*
*மண்ணின் வாடையும் சேர்ந்து வரும்"*



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

11. **சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனை என்று ஜெயகாந்தன் எதைக் குறிப்பிடுகிறார்?**
சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனை என்று ஜெயகாந்தன் குறிப்பிடுவது பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காப்பதே..

இயல் – 9

கவிதைப் பேழை

## சித்தாளு

1. **கல்மனங்கள் எப்படி பட்டவை?**
கல்மனங்கள் செங்கற்களைப் போலவே இருக்கும்.

2. **ஒரு பெண்ணின் தலையில் எழுதப்பட்டது எது?**
ஒரு பெண்ணின் தலையில் எழுதப்பட்டது 'கற்காலம்தான் எப்போதும்'.

3. **கற்கள் எதற்காகச் சுமக்கப்படுகின்றன?**
கற்கள் அடுத்தவேளை உணவுக்காக சுமக்கப்படுகின்றன.

4. **செங்கற்கள் அறியாதவை எவை?**
சித்தாளின் மனச்சுமைகள் செங்கற்கள் அறியாது.

5. **நாகூர் ரூமியின் கவிதைத் தொகுதிகள் எவை?**
   - நதியின் கால்கள்
   - ஏழாவது சுவை
   - சொல்லாத சொல்

6. **கப்பலுக்குப் போன மச்சான் - எத்தகைய நூல்?**
கப்பலுக்குப் போன மச்சான் என்பது ஒரு **நாவல்** ஆகும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

இயல் – 9

கவிதைப் பேழை

# தேம்பாவணி

1. ***அருளப்பன் எனப்படுபவர் யார்?***
*கிறித்துவிற்கு முன் தோன்றியவர் திருமுழுக்கு யோவான் எனப்படும் அருளப்பன்.*

2. ***இப்பாடப் பகுதியின் மையக் கருத்து யாது?***
*கருணையன் அடையும் துன்பத்தில் இயற்கையும் பங்குகொண்டு கலங்கி படம்பிடித்துக் காட்டுகின்றன.*

3. ***கிறித்துவின் வருகையை அறிவித்தவர் யார்?***
*கிறித்துவின் வருகையை அறிவித்தவர் யோவான்.*

4. ***ஆக்கையை அடக்கிப் பூவோடு***
***அழுங்கணீர் பொழிந்தான் மீதே - விளக்குக.***
*பயனுள்ள வாழ்க்கை நடத்திய தன் அன்னையின் உடலை, மண் இட்டு மூடி அடக்கம் செய்து, அதன்மேல் மலர்களையும் தன் கண்ணீரையும் ஒரு சேரப் பொழிந்தான்.*

5. ***மழைநீராக உருவகிக்கப்படுவது எது?***
*உண்மையான சொற்களே மழைநீராக உருவகிக்கப்படுகிறது.*

6. ***தூய மணி - எதைக் குறிக்கிறது?***
*தூய மணி மழைத்துளியைக் குறிக்கிறது.*

7. ***கருணையன் துயரம் எத்தகையது?***
*புண்ணின் வலியால் வருந்துவது போன்றது கருணையன் துயரம்.*

8. ***எவையெல்லாம் கருணையனுக்காக அழுதன?***
*மணம் வீசும் மலர்களும் மலர்ந்த சுனை தோறும் உள்ள பறவைகளும் வண்டுகளும் அக்காட்டினிலே அழுவன போன்று கூச்சலிட்டன.*



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

கற்கண்டு

# இயல் – 9 அணி

1. **செய்யுள்களுக்கு அழகு செய்து சுவையை உண்டாக்குவன எவை?**
   செய்யுள்களுக்கு அழகு செய்து சுவையை உண்டாக்குவன அணிகள்.

2. **போருநழந் தெடுத்த - பாடலில் பயின்றுள்ள அணி என்ன?**
   போருநழந் தெடுத்த - பாடலில் பயின்றுள்ள அணி தற்குறிப்பேற்ற அணி ஆகும்.

3. **தீவகம் பொருள் கூறுக?**
   தீவகம் என்னும் சொல்லுக்கு 'விளக்கு' என்று பொருள்.

4. **தீவக வகைகள் யாவை?**
   **தீவக வகைகள்:**
   - முதல்நிலைத் தீவகம்
   - இடைநிலைத் தீவகம்
   - கடைநிலைத் தீவகம்

5. **செய்யுளில் பல இடங்களுக்கும் சென்று சொற்களுடன் சேரும் சொல் உடைய அணி எது?**
   செய்யுளின் பல இடங்களிலும் உள்ள சொற்களோடு சென்று பொருந்திப் பொருளை விளக்குவதால் இவ்வணி தீவக அணி எனப்பட்டது.

6. **சேந்தன - பொருள் எழுதுக.**
   சேந்தன - சிவந்தன.

7. **சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி காணும் அணி எது?**
   சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்வது நிரல்நிறை அணி எனப்படும்.

8. **தன்மை அணி என்றால் என்ன?**
   எவ்வகைப்பட்ட பொருளாக இருந்தாலும் இயற்கையில் அமைந்த அதன் உண்மையான இயல்புத் தன்மையினைக் கேட்பவர்களின் மனம் மகிழுமாறு உரிய சொற்களை அமைத்துப் பாடுவது தன்மையணியாகும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

9. ***தன்மை அணியின் வகைகள் யாவை?***

***தன்மை அணியின் வகைகள்:***

- *பொருள் தன்மையணி*
- *குணத் தன்மையணி*
- *சாதித் தன்மையணி*
- *தொழிற் தன்மையணி*

www.Padasalai.Net



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# பொருள் எழுதுக (சொல்லும் பொருளும்)

1. துய்ப்பது - கற்பது, தருதல்
2. மேவலால் - பொருந்துதல், பெறுதல்
3. அடவி - காடு
4. அவல் - பள்ளம், விளைநிலம், குளம்
5. சுவல் - மேட்டுநிலம், தோள், கழுத்து
6. செறு - வயல், பாத்தி, செய்
7. பழனம் - பொய்கை, மருதநிலம், நீர்நிலச் சேறு, பொதுநிலம்
8. புறவு - காடு, முல்லைநிலம், புறம்பு, புறா, முல்லைக்கொடி
9. மயலுறுத்து - மயங்கச்செய்
10. ப்ராணரஸம் - உயிர்வளி
11. லயத்துடன் - சீராக
12. நனந்தலை உலகம் - அகன்ற உலகம்
13. நேமி - வலம்புரிச்சங்கு
14. கோடு - மலை
15. கொடுஞ்செலவு - விரைவாகச் செல்லுதல்
16. நறுவீ - நறுமணமுடைய மலர்கள்
17. தூஉய் - தூவி
18. விரிச்சி - நற்செயல்
19. சுவல் - தோள்
20. அகன்சுடர் - உயர்ந்த தீபம்
21. ஆர்கலி - கடல், மழை, பறவை
22. கட்புள் - விழித்திருக்கும் பறவை
23. கொடுவாய் - வளைந்த வாய்
24. திருவில் - வானவில்
25. அருகுற - அருகில்
26. முகமன் சொற்கள் - ஒருவரை நலம் வினவிக் கூறும் விருந்தோம்பல்
27. அசைஇ - இளைப்பாறி
28. கடும்பு - சுற்றம்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

29. ஆரி - அருமை
30. வயிரியம் - கூத்தர்
31. இறடி - தினை
32. அல்கி - தங்கி
33. நரலும் - ஒலிக்கும்
34. படுகர் - பள்ளம்
35. வேவை - வெந்தது
36. பொம்மல் - சோறு
37. சுடினும் - சுட்டாலும்
38. மாளாத - தீராத
39. மாயம் - விளையாட்டு
40. விசிம்பு - வானம்
41. ஊழி - யுகம்
42. ஊழ் - முறை
43. தண்பெயல் - குளிர்ந்த மழை
44. ஆர்தருபு - வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்த
45. பீடு - சிறப்பு
46. ஈண்டி - செறிந்து திரண்டு
47. அவிர்தல் - விளங்குதல்
48. அழல் - நெருப்பு
49. உவா - முழுநிலவு
50. கங்குல் - இரவு
51. கனலி - நெருப்பு, ஞாயிறு
52. கேள்வியினான் - நூல் வல்லான்
53. கேண்மையினான் - நட்பினன்
54. தார் - மாலை
55. முடி - தலை
56. முனிவு - சினம்
57. அகத்து உவகை - மனமகிழ்ச்சி
58. தமர் - உறவினர்
59. நீபவனம் - கடம்பவனம்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

60. **மீனவன்** - பாண்டிய மன்னன்
61. **கவரி** - சாமரை (கவரிமாவின் முடியில் செய்த விசிறியாகிய அரசச் சின்னம்)
62. **நுவன்ற** - சொல்லிய
63. **என்னா** - அசைச் சொல்
64. **மன்றல்** - திருமணம்
65. **அடிச்சுவடு** - காலடியின் அடையாளம்
66. **அகராதி** - அகரமுதலி
67. **தூவல்** - மழை, இறகு, பேனா, ஓவியம்
68. **மருள்** - மயக்கம், வியப்பு
69. **பண்டி** - வயிறு
70. **அசும்பிய** - ஒளிவீசுகிற
71. **முச்சி** - தலையுச்சிக் கொண்டை
72. **தால்** - நாக்கு
73. **உழுவை** - புலி
74. **அகவுதல்** - அழைத்தல், ஒலித்தல், பாடுதல்
75. **ஏந்தெழில்** - மிகுந்த அழகு
76. **அணிமை** - அண்மை, அருகு, பக்கம்
77. **சுண்ணம்** - நறுமணப்பொடி
78. **காருகர்** - நெய்பவர் (சாலியர்)
79. **தூசு** - பட்டு
80. **துகிர்** - பவளம்
81. **வெறுக்கை** - செல்வம்
82. **நொடை** - விலை
83. **பாசவர்** - வெற்றிலை விற்போர்
84. **ஓசுநர்** - எண்ணெய் விற்போர்
85. **மண்ணுள்வினைஞர்** - ஓவியர்
86. **மண்ணீட்டாளர்** - சிற்பி
87. **கிழி** - துணி
88. **மிரியல்** - மிளகு

89. **வருத்தனை** - பெருகுதல், தொழில், சீவனம்
90. **அதசி** - சணல்
91. **துரிஞ்சில்** - வெளவால் வகை, சீக்கிரி மரம்
92. **ஆசுகவி** - இன்னசொல் கொண்டு, இன்ன பொருள்படப் பாடுக என்றால் உடனே பாடுவது
93. **மதுரகவி** - சொற்சுவையும் பொருட்சுவையும் ததும்பப் பாடுவது
94. **சித்திரகவி** - எழுத்தைச் சித்திரமாக வடித்து நிறுத்துவது
95. **வித்தாரகவி** - எதையும் விரிவாகப் பாடுவது
96. **சேக்கை** - படுக்கை
97. **யாக்கை** - உடல்
98. **பிணித்து** - கட்டி
99. **வாய்ந்த** - பயனுள்ள
100. **இளங்கூழ்** - இளம்பயிர்
101. **தயங்கி** - அசைந்து
102. **காய்ந்தேன்** - வருந்தினேன்
103. **கொம்பு** - கிளை
104. **புழை** - துளை
105. **கான்** - காடு
106. **தேம்ப** - வாட
107. **அசும்பு** - நிலம்
108. **உய்முறை** - வாழும் வழி
109. **ஓர்ந்து** - நினைத்து
110. **கடிந்து** - விலக்கி
111. **உவமணி** - மணமலர்
112. **படலை** - மாலை
113. **துணர்** - மலர்கள்
114. **குணதரன்** - கருணையாளன்
115. **செவ்வை** - நேர்மை, சரியானநிலை
116. **நகல்** - பிரதி, சிரிப்பு, படி, பரிகாசம், மகிழ்ச்சி
117. **பூட்கை** - வலிமை, உறுதி, கொள்கை



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# பகுபத உறுப்பிலக்கணம்

1. பொறித்த - பொறி + த் + த் + அ

பொறி - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

2. உரைத்த - உரை + த் + த் + அ

உரை - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

3. வருக - வா(வரு) + க

வா - பகுதி
வரு எனக் குறுகியது விகாரம்
க - வியங்கோள் வினைமுற்று விகுதி

4. மலைந்து - மலை + த்(ந்) + த் + உ

மலை - பகுதி
த் - சந்தி 'ந்' ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

5. பொழிந்த - பொழி + த்(ந்) + த் + அ

பொழி - பகுதி
த் - சந்தி 'ந்' ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

6. **கிளர்ந்த - கிளர் + த்(ந்) + த் + அ**

| | | |
|---|---|---|
| **கிளர்** | - | பகுதி |
| **த்** | - | சந்தி |
| **த்(ந்)** | - | 'ந்' ஆனது விகாரம் |
| **த்** | - | இறந்தகால இடைநிலை |
| **அ** | - | பெயரெச்ச விகுதி |

7. **தணிந்தது - தணி + த்(ந்) + த் + அ + து**

| | | |
|---|---|---|
| **தணி** | - | பகுதி |
| **த்** | - | சந்தி |
| **த்(ந்)** | - | 'ந்' ஆனது விகாரம் |
| **த்** | - | இறந்தகால இடைநிலை |
| **அ** | - | சாரியை |
| **து** | - | படர்க்கை வினைமுற்று விகுதி |

8. **பதிந்து - பதி + த்(ந்) + த் + உ**

| | | |
|---|---|---|
| **பதி** | - | பகுதி |
| **த்** | - | சந்தி 'ந்' ஆனது விகாரம் |
| **த்** | - | இறந்தகால இடைநிலை |
| **உ** | - | வினையெச்ச விகுதி |

9. **மயங்கிய - மயங்கு + இ(ன்) + ய் + அ**

| | | |
|---|---|---|
| **மயங்கு** | - | பகுதி |
| **இ(ன்)** | - | இறந்தகால இடைநிலை; 'ன்' புணர்ந்து கெட்டது. |
| **ய்** | - | உடம்படுமெய் |
| **அ** | - | பெயரெச்ச விகுதி |

10. **அறியேன் - அறி + ய் + ஆ + ஏன்**

| | | |
|---|---|---|
| **அறி** | - | பகுதி |
| **ய்** | - | சந்தி |
| **ஆ** | - | எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது. |
| **ஏன்** | - | தன்மை ஒருமை வினைமுற்று |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

11. ஒலித்து - ஒலி + த் + த் + உ

| | | |
|---|---|---|
| ஒலி | - | பகுதி |
| த் | - | சந்தி |
| த் | - | இறந்தகால இடைநிலை |
| உ | - | வினையெச்ச விகுதி |

12. அமர்ந்தான் - அமர் + த்(ந்) + த் + ஆன்

| | | |
|---|---|---|
| அமர் | - | பகுதி |
| த் | - | சந்தி 'ந்' ஆனது விகாரம் |
| த் | - | இறந்தகால இடைநிலை |
| ஆன் | - | ஆண்பால் வினைமுற்று விகுதி |

www.Padasalai.Net



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# இலக்கணக்குறிப்பு

| இயல் | சொற்கள் | இலக்கணக்குறிப்பு |
|---|---|---|
| இயல் - 2 | மூதூர் | பண்புத்தொகை |
| | உறுதுயர் | வினைத்தொகை |
| | கைதொழுது | மூன்றாம் வேற்றுமைத் தொகை |
| | தடக்கை | உரிச்சொல் தொடர் |
| இயல் - 3 | நன்மொழி | பண்புத்தொகை |
| | வியத்தல், நோக்கல், எழுதுதல், உரைத்தல், செப்பல், இருத்தல், வழங்கல் | தொழிற்பெயர்கள் |
| | அசைஇ, கெழீஇ | சொல்லிசை அளபெடைகள் |
| | பருஉக், குருஉக்கண் | செய்யுளிசை அளபெடைகள் |
| இயல் - 4 | ஊழ்ஊழ் | அடுக்கு தொடர் |
| | வளர்வானம் | வினைத்தொகை |
| | செந்தீ | பண்புத்தொகை |
| | வாரா (ஒன்றன்) | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| இயல் - 5 | கேள்வியினான் | வினையாலணையும் பெயர் |
| | காடனுக்கும் கபிலனுக்கும் | எண்ணும்மை |
| இயல் - 6 | குண்டலமும் குழைகாதும் | எண்ணும்மை |
| | ஆடுக | வியங்கோள் வினைமுற்று |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| இயல் - 7 | வண்ணமும் சுண்ணமும் | எண்ணும்மை |
| | பயில்தொழில் | வினைத்தொகை |
| இயல் - 9 | காக்கென்று | காக்கவென்று என்பதன் தொகுத்தல் விகாரம் |
| | கணீர் | கண்ணீர் என்பதன் இடைக்குறை |
| | காய்மணி, உய்முறை, செய்முறை | வினைத்தொகைகள் |
| | மேய்முறை | வேற்றுமைத்தொகை |
| | கைமுறை | மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# இடம் சுட்டிப் பொருள் விளக்கம்

1. **"காலின் ஏழடிப் பின் சென்று"** - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக?

- பாடல்
- இடம்
- பொருள்
- விளக்கம்

➢ **பாடல்** : "காலின் ஏழடிப் பின் சென்று"

➢ **இடம்** : இல்லம் (வீடு)

இடம்பெற்ற நூல் - பொருநராற்றுப்படை

➢ **பொருள்** : இல்லத்திற்கு வந்த விருந்தினரை ஏழடி நடந்துச் சென்று வழியனுப்பினர்.

➢ **பொருள் விளக்கம்** : பண்டைத் தமிழர்கள் வீட்டிற்கு வந்த விருந்தினர் திரும்பிச் செல்லும்போது, அவர்களை பிரிய மனமின்றி வருந்தினர். மேலும், வழியனுப்பும் பொழுது அவர்கள்செல்லவிருக்கின்ற நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட தேரின்வரை ஏழடி நடந்துச் சென்று வழியனுப்பினர்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

2. *"நின் இடம் பிரியா இமையப்பாவை" - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக?*

- பாடல்
- இடம்
- பொருள்
- விளக்கம்

- **பாடல்** : "நின் இடம் பிரியா இமையப்பாவை"
- **இடம்** : இறைவனிடம் (சிவபெருமான்)
  இடம்பெற்ற நூல் – திருவிளையாடற்புராணம்
- **பொருள்** : பாண்டிய மன்னன் குலேச பாண்டியன் இடைக்காடனார் புலவரின் புலமையை மதிக்காமைக் குறித்து இறைவனிடம் முறையிடுதல்.
- **பொருள் விளக்கம்** : இடைக்காடனார் இறைவனிடம் (சிவன்) "பாண்டியன் என்னை இகழவில்லை, சொல்லின் வடிவான உன் இடபுறம் வீற்றிருக்கும் பார்வதி தேவியையும் சொல்லின் பொருளாக விளங்கும் உன்னையுமே அவமதித்தான்" என்று சினத்துடன் கூறிச் சென்றார். அவரது சொல் வேற்படைபோல் இறைவனின் திருச்செவியில் சென்று தைத்தது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

3. **“உள்வாய் வார்த்தை உடம்புத் தொடாது”** - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக?

- **பாடல்**
- **இடம்**
- **பொருள்**
- **விளக்கம்**

- **பாடல்** : “உள்வாய் வார்த்தை உடம்புத் தொடாது”
- **இடம்** : உள்ளம் (மனம் என்னும் வயல்)
  இடம்பெற்ற நூல் – காலக்கணிதம்
- **பொருள்** : உள்ளத்தில் கருவாகத் தோன்றும் மூலப் பொருள்களை எல்லாம் கவிதையாக உருவாக்குகிறார்.
- **பொருள் விளக்கம்** : கவிஞனின் குணம், பணி மனம் என்னும் வயலில், சொல்லேர் உழவனாக, சிந்தனை விதையைத் தூவி, மடமைக்களை பறித்து, தத்துவ நீர் பாய்ச்சி, அறம் என்னும் கதிர் அறுப்பவன் கவிஞன். அரசு மக்களுக்கு நன்மை செய்தால் புகழ்ந்தும் தீமை செய்தால் எதிர்த்தும் பாடுவது என் பணி. இதனால் உங்களின் மனதில் தோன்றும் வார்த்தை என்னை ஒன்றும் செய்யாது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

4. ***"தலைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக?***

- பாடல்
- இடம்
- பொருள்
- விளக்கம்


- **பாடல்** : "தலைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்"
- **இடம்** : சென்னை - ஆந்திரா
  இடம்பெற்ற நூல் - சிற்றக்கல் ஒளி - (ம.பொ.சி)
- **பொருள்** : ஆந்திர அரசின் தலைநகரம் ஆந்திர நாட்டின் எல்லைக்குள்ளேயும் சென்னை தமிழருக்கே என்று ம.பொ.சி முழங்கினார்.
- **பொருள் விளக்கம்** : ஆந்திர மாநிலம் பிரியும்போது சென்னைதான் அதன் தலைநகராக அமைய வேண்டும் என்று ஆந்திரத் தலைவர்கள் கருதினர். அந்நாள் முதல்வர் இராஜாஜி தலைநகர் காக்கத் தன் முதலமைச்சர் பதவியைத் துறந்தார். இதையொட்டி மாநகராட்சியின் சிறப்பு கூட்டமொன்றை அப்போதைய மாநகராட்சியின் தந்தை செங்கல்வராயன் தலைமையில் கூட்டி, சென்னை பற்றிய தீர்மானமொன்றை முன்மொழிந்தபோது, "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" என்று ம.பொ.சி முழங்கினார். இதன்படி ஆந்திர அரசின் தலைநகரம் ஆந்திர நாட்டின் எல்லைக்குள்ளேயே அமைந்தது, சென்னை தமிழருக்கே என்பது உறுதியானது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# காட்சியைக் கண்டு கவினுற எழுதுக

## இயல் - 1



### மொழிக்கல்வி

கனவு மெய்ப்பட வேண்டும்
கல்வி வசப்பட வேண்டும்
கற்க நினைப்பதெல்லாம் - நாம்
கற்று நிறைவுற வேண்டும்
அறிவிற்கு வெளிச்சம் வகிக்கும் நூலே!
அறிவாகிய பூட்டைத் திறக்க
நல்ல புத்தகம் என்னும் சாவி தேவை
பூட்டிய அறிவின் திறவுகோல் கல்வியே!
படி; படி படிப்படியாய்ப்படி
எழுது; எழுது எண்ணி எண்ணி எழுது
காலத்தை வெல்லலாம் - கல்வி பயிலு
உலகத்தை வெல்லலாம் - கல்வி பயிலு
அறிவை பூட்டி வைக்காதே
அறியாமை இருளில் தலைகுனியாதே!..
சலைக்காமல் நூல் படித்தால்
முளைக்கும் சிறகு முளைக்கும்
மூவுலகும் இட்டுச் செல்லும்..........



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## இயல் - 2



## உயிரின் ஓசை (காற்றே வா)

*காற்றேவா!*
*உன்னை பாடாமல்*
*இருக்க முடியாது - ஏனெனில்*
*பாட்டின் மூல ஊற்றே - நீதான்*
*பொய்கையிடம் போனால்*
*குளிர்ந்து போகிறாய்*
*பூக்களைத் தொட்டால்*
*நறுமணத்தோடு வருகிறாய்*
*புல்லாங்குழலில் புகுந்தால்*
*இசையாகி விடுகிறாய்*
*எங்களிடம் வந்தால் மட்டுமே*
*அழுக்காகி விடுகிறாய்*
*மாயங்கள் செய்கின்ற - பூங்காற்றே!*
*இத்தனை நாள்*
*உனைப் பாடாதிருந்து விட்டேன்.......*



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# இயல் - 3



## பண்பாட்டின் விருந்தோம்பல்

*வறுமையில் வாடிய எனக்கு*
*ஒருநாள் கிடைத்தது நல்லுணவு...*
*உண்ணும் வேளையில் நீ! வந்தாய்*
*பசியால் இணைந்தோம்*
*பகிர்ந்து உண்ணலாம்*
*ஆடம்பர விருந்தில்*
*மிச்சமுள்ள எச்சம்*
*வீழ்ந்தது குப்பைத் தொட்டியில்*
*இரண்டு காலும் நான்கு காலும்*
*ஒன்றாய் உண்டன....*
*என் யானைப் பசிக்கு*
*போதுமானதாக இருக்கிறது*
*பெண்ணே......*
*உன் எறும்பளவு புன்னகை.......*
*பண்பாட்டின் விருந்தோம்பலால்*

www.Padasalai.Net



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# இயல் - 4




## தொழில் நுட்பம்

*மாட்டிற்கு மூக்கணாங்கயிறு போடும்*
*மானிடப் பிறவிகளே!*
*இதோ....*
*உனக்கு மூக்கணாங்கயிறு போட*
*வந்துவிட்டான்*
*திறன்பேசி நாயகன்*
*இவை இல்லாமல்*
*மனிதனில்லை என்ற நிலை*
*மனிதனோடு ஒட்டிப் பிறந்த*
*உறவாய் -*
*மனிதனின் உயிரை விட*
*உறவை விட பெரிதும் மதிப்பது*
*காமுகர்கள் கைக்குள் பணமானது*
*எதிர்க்கால சிந்தனையில் நிகழ்கால மனிதர்கள்*
*நவீன கல்லறைக்குள்.......*



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# இயல் - 5



## கல்வி

*வெட்டிய மரத்தின் மீதமர்ந்து*
*வளர்க்கும் கல்வி*
*இருக்கும்போது அறியாமையில் இருந்தோர்*
*இனிமேல் கிடைக்க வரம் கேட்கிறார்கள்*
*கண்கெட்ட பிறகு*
*சூரிய வணக்கம் இதுதான்*
*நடு மரம் நடு*
*மண்ணுக்கும் மனிதனுக்கும்*
*வான்புனலையும் தென்றல் காற்றையும் தரும்*
*மரம் - இல்லயேல்*
*மனிதனுமில்லை*
*நிலைப்பெற்ற எவ்வுயிருமில்லை*
*உலகமே இங்கு சுடுகாடாச்சு*
*வெட்ட வெளியில் அமர்ந்து படிக்கும்*
*அவல நிலைக்கும் காரணமா போச்சு*
*நடு மரம் நடு......*



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

# இயல் - 6



## ஓயிலாட்டம்

*ஒய்யாரமாய் ஆடும் கலை*
*ஒயிலாட்டம் ஆன கலை*
*சீருடைப்போல் போடும் உடை*
*வீரமாக ஆடும் கலை*
*தமிழர்களால் போற்றும் கலை*
*மாறுமோ எங்கள் நிலை*
*அழகாய் ஆடுவோம்;*
*அன்பாய் பாடுவோம்;*
*ஒயிலாட்டம் என்று கூறுவோம்;*
*ஒற்றுமையாய் ஆடுவோம்;*
*துன்பம் தீர்க்கும் கலை*
*துள்ளித்துள்ளி ஆடும் கலை*
*ஆண்கள் ஆடும் கலை*
*அழகாய் ஆடும் கலை. (ஒயிலாட்டம்)*



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# இயல் - 7



## விவசாய நாடு

*விண்ணையும் மண்ணையும்*
*நன்கு உணர்ந்த*
*காலத்தையும் நேரத்தையும்*
*கண்டுபிடித்த*
*மானுடப் பிறப்பின் முதல் விஞ்ஞானி*
*நீரின் மேன்மையை அறிந்தவன்*
*நிலத்தின் வளம் அறிந்தவன்*
*மண்ணின் மகிமை அறிந்தவன்*
*விதையின் விதியைக் கண்டறிந்தவன்*
*காடுமேடுகளையும் கழனியாக்கி*
*இயற்கையோடு பின்னிப்பிணைந்து*
*தன்னிலை மாறாத தங்கமகன்*
*மண்ணை வைரமாகவும் விதையை வீரியமாகவும்*
*உழவை உயிராக கருதி*
*கதிர்களை கடவுளாக போற்றுபவன் - (விவசாயி)*



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# இயல் - 8



## அறம் செய விரும்பு

*மனிதா! உன் உழைப்பை நீ நம்பு*
*யார்? கொடுப்பார்கள் என்று*
*ஏங்கி தவிக்காதே!*
*அவர், இவர், கடவுள் கொடுப்பார் என்று*
*ஏங்கி தவிக்காதே*
*உன்னையே! நீ நம்பு*
*உடலையும் மனதையும் வலிமையாக்கு*
*பிறர் மனம் புண்படாமல்*
*நம் மனம் தளராமல்*
*வாழும் வாழ்வே!*
*பண்பட்டோர் வாழ்வு*
*உழைப்பால் உயர்ந்திடு*
*உழைத்திடு*
*அறம் செய விரும்பு அறம் செய விரும்பு.......*



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# இயல் - 9



## மனிதமும் மோகமும்

கொடுத்தது எல்லாம் கொடுத்தான்
அவன் யாருக்காக கொடுத்தான்
ஒருத்தருக்கா கொடுத்தான் இல்லை
ஊருக்காகக் கொடுத்தான்
படைத்தவன் மேல் பசியுமில்லை
பசித்தவன் மேல் பாவமில்லை
கிடைத்தவர்கள் பிரித்துக் கொண்டார்
உழைத்தவர்கள் தெருவில் நின்றார்
பலர் வாட வாட சிலர் வாழ வாழ -
ஒரு போதும் தெய்வம் கொடுத்ததில்லை
மடி நிறைய பொருள் இருக்கும்
மனம் நிறைய பொருள் இருக்கும்
ஒருகைக்கு கொடுத்தது மறுகைக்குத் தெரியாது
இன்று இந்த செல்ஃபி மோகம்......
சொற்ப நேரத்தில்....... பரிக்கின்றது பல உயிரை.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# பயிற்சி

## நிற்க அதற்குத்தக

### இயல்-1

| இன்சொல் வழி | தீய சொல் வழி |
|---|---|
| பிறர் மனம் மகிழும் | பிறர் மனம் வாடும் |
| அறம் வளரும் | அறம் தேயும் |
| புகழ் பெருகும் | இகழ் பெருகும் |
| நல்ல நண்பர்கள் சேருவர் | நல்ல நண்பர்கள் விலகுவர் |
| அன்பு நிறையும் | பகைமை நிறையும் |

இதில் நீங்கள் செல்லும் வழி யாது? உங்கள் நண்பருக்குக் காட்டும் வழி யாது?

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# இயல்-2

## வானொலி அறிவிப்பு

*ஜல் புயல் சென்னைக்குத் தென்கிழக்கே 150 கி.மீ. தொலைவில் மையம் கொண்டுள்ளது. இன்று இரவு சென்னைக்கும் நெல்லூருக்கும் இடையே கரையக் கடக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

## புயலின்போது

| | |
|---|---|
| *புயலின்போது வெளியே செல்லவேண்டாம்.* | *வெளியேற நேர்ந்தால் ஆரம்பகட்ட எச்சரிக்கையின்போதே வெளியேறவும்.* |
| *தொலைபேசி, மின்சாதனங்கள் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும்.* | *மாடியில் இருப்பதைத் தவிர்த்துத் தள பகுதியிலேயே தங்கவும்.* |
| *வானொலி அறிவிப்பைக் கேட்டுப் பின்பற்றவும்* | *காற்று அடிப்பது நின்றாலும் எதிர்த்திசையிலிருந்து மறுபடி வேகமாக வீச ஆரம்பிக்கும். எனவே, காற்றடிப்பது முடிந்துவிட்டதாக நினைக்கவேண்டாம்.* |
| *மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்கவும்* | *வாகனத்தை ஓட்ட நேர்ந்தால் கடற்கரைப் பகுதிகளுக்குத் தொலைவிலும், மரங்கள் மிங்கம்பிப் பாதைகள், நீர் வழிகள் ஆகியவற்றிலிருந்து விலகியும் வாகனத்தின் உள்ளேயே தங்கியிருக்கவும்.* |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

மேற்கண்ட அறிவிப்பைக் கேட்ட நீங்கள், உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக.

## இயல்-3

"தம்பி.. உனக்குப் பிடிச்ச காய் சொல்லு?" - "கேரட்"

"பிடிச்ச பழம்?" - "ஆப்பிள்"

பிடிச்ச காலை உணவு? - "நூடுல்ஸ்"

"மத்தியானத்துக்கு" - "ஃப்ரைடு ரைஸ்"

"ராத்திரி...?" - "பீட்ஸா அல்லது பாஸ்தா"

இது ஏதோ ஆங்கிலப்படத்தின் வசனம் அல்ல. "சரியா சாப்பிட மாட்டேங்கிறான் டாக்டர்" என்று என்னிடம் அழைத்து வரப்பட்ட ஒரு சிறுவனுடனான என் உரையாடல். ஒட்டுமொத்த இளைய தலைமுறையும் பாரம்பரிய உணவை விட்டு வேகமாக விலகிச் சென்றது எப்படி? இட்லியும், சாம்பார் சாதமும். கத்திரிக்காய்ப் பொரியலும் இனி காணாமல் போய்விடுமா? அதிர்ச்சியான பதில், 'ஆம், காணாமல் போய்விடும்'! உங்கள் குழந்தைகள், "ஆடு, மாடுகளைத் தவிர மனுஷங்க கூட கீரையைச் சாப்பிடுவாங்களா மம்மி? என எதிர்காலத்தில் கேட்கக்கூடும்!

மருத்துவர் கு.சிவராமனின் இக்கருத்திற்குச் சமூக அக்கறையுடனான உங்களின் பதில் என்னவாக இருக்கும்?

................................................................................................................................................

................................................................................................................................................

................................................................................................................................................



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# இயல்-4

*தொலைக்காட்சி நிகழ்வுகளையே*
*பார்த்துக்கொண்டிருக்கும் தம்பி;*

*திறன்பேசியிலேயே விளையாடிக்*
*கொண்டிருக்கும் தங்கை;*

*காணொலி விளையாட்டுகளில்*
*மூழ்கியிருக்கும் தோழன்;*

*எப்போதும் சமூக ஊடகங்களில் இயங்கியபடி*
*இருக்கும் தோழி*



*இவர்கள் எந்நேரமும் நடப்புலகில் இருக்காமல் கற்பனை உலகில் மிதப்பவர்களாக இருக்கிறார்கள்! இவர்களை நெறிப்படுத்தி நடைமுறை உலகில் செயல்படவைக்க நீங்கள் செய்யும் முயற்சிகளைப் பட்டியல் இடுக.*

| | |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## இயல்-5

| பள்ளியில் நான் | வீட்டில் நான் |
|---|---|
| நேரத்தைச் சரியாகக் கடைப்பிடிப்பேன். | வீட்டுப் பணிகளைப் பகிர்ந்து செய்வேன். |
| உடன்பயிலும் மாணவரின் திறமையைப் பாராட்டுவேன். | |
| | |
| | |

## இயல்-6

*அரசின் பொங்கல் விழாவில் சிற்றூர்க் கலைகளைக் காட்சியாக்கியிருக்கிறார்கள். ஒருபுறம் திரைகட்டித் தோற்பாவைக் கூத்து நிகழ்ந்துகொண்டிருக்கிறது. இன்னொருபுறம் பொம்மலாட்டம் ஆடிக்கொண்டிருந்தனர். சற்று நடந்தால் தாரை தப்பட்டை முழங்க ஒயிலாட்டம் ஆடியவாறு மண்ணின் மக்கள்.... இக்கலைகளை நீங்கள் நண்பர்களுடன் பார்த்தவாறும் சுவைத்தவாறும் செல்கிறீர்கள்.*

*இக்கலைகளைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் மேன்மேலும் பரவலாக்கவும் நீங்கள் செய்யவிருப்பனவற்றை வரிசைப்படுத்துக.*



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| | |
|---|---|
| 1 | பிறந்த நாள் விழாக்களில் மயிலாட்டம் முதலான கலைகளை நிகழ்த்த முனைவேன். |
| 2 | எங்கள் குடும்ப விழாக்களில் பொம்மலாட்டம் நிகழ்த்த ஏற்பாடு செய்வேன். |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |

## இயல்-7

அரசால் நிறுவப்படும் கட்டிடங்களிலும் சிலைகளிலும் நிறுவியவர் பெயர், நிறுவப்பட்ட காலம், நோக்கம் சார்ந்த பிற செய்திகளும் தாங்கிய கல்வெட்டுகளைப் பார்த்திருப்பீர்கள். இவை நமது இன்றைய வரலாற்றைப் புலப்படுத்துபவை.

அதுபோலவே கோவில்களிலும் பழமையான நினைவுச் சின்னங்களிலும் கட்டியவர்கள் பெயர்களும் வரலாறும் இடம்பெற்றிருக்கும். அவை நம் பழம்பெருமையையும் வரலாற்றையும் அறியச் செய்யும் அரிய ஆவணங்கள் என்று அறிவீர்கள்தானே? இவற்றைப் பராமரிக்கவும், பாதுகாக்கவும் உங்களால் இயன்ற செயல்கள்.

| | |
|---|---|
| கல்வெட்டுகளின் வழி அறியலாகும் செய்திகளை என் நண்பர்களுக்குக் கூறுவேன். | அவற்றின் மதிப்பைக் குறைக்கும்படி எதுவும் கூற அனுமதிக்க மாட்டேன். |
| கல்வெட்டுகள் குறித்து அவர்களைப் பெருமிதம் அடையச் செய்வேன். | |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# இயல்-8

*நாம் எப்போதும் ஒரே மனநிலையில் இருப்பதில்லை. நம்மைச் சுற்றி நிகழும் செயல்களால் நாம் அலைக்கழிக்கப்படுகிறோம். உடன்பயில்பவருடனோ, உடன்பிறந்தவருடனோ எதிர்பாராமல் சச்சரவு ஏற்படுகிறது..... இந்தச் சமயத்தில் சினம்கொள்ளத் தக்க சொற்களைப் பேசுகிறோம்; கேட்கிறோம்; கைகலப்பில் ஈடுபடுகிறோம்; இதுகாறும் கற்ற அறங்கள் நமக்குக் கைகொடுக்க வேண்டாமா? மாணவ நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்களும் அதனால் ஏற்படும் நன்மைகளும்...*

| **நாம் செய்யவேண்டுவன (அறங்கள்)** | **அறங்கள் தரும் நன்மைகள்** |
|---|---|
| நல்ல சொற்களையே தேர்ந்தெடுத்துப் பேசுதல். | நல்ல நண்பர்களைப் பெறலாம்; எதிரிகளையும் நண்பராக்கலாம். |
| ஒருவரைப் பற்றி இன்னொருவரிடம் மாற்றிப் பேசாதிருத்தல். | |
| பழிவாங்கும் எண்ணத்தைக் கைவிடல். | |
| | |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## இயல்-9

ஒவ்வொரு சூழலிலும் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்தபடி இருக்கிறார்கள்; உதவி பெற்றபடியும் இருக்கிறார்கள்; சில உதவிகள் அவர்கள் மீதுள்ள அன்பினால் செய்கிறோம்; சில உதவிகள் இரக்கத்தால் செய்கிறோம். தொடர்வண்டியில் பாட்டுப் பாடிவரும் ஒருவருக்கு நம்மையறியாமல் பிச்சை போடுகிறோம். தொல்லை வேண்டாம் என்று கருதி, வேண்டாவெறுப்போடு சில இடங்களில் உதவி செய்கிறோம்!

நீங்கள் செய்த, பார்த்த உதவிகளால் எய்திய மனநிலை...

| உதவி | மனநிலை |
|---|---|
| வகுப்பறையில் எழுதுகோல் கொடுத்து உதவியபோது | இக்கட்டான சூழலில் செய்த உதவியால் எனக்கு மனநிறைவு; அவருக்கு மனமகிழ்ச்சி! |
| உறவினருக்கு என் அம்மா பணம் அளித்து உதவியபோது | கல்லூரிப் படிப்பைத் தொடர முடிந்ததால் உறவினருக்கு ஏற்பட்ட நன்றியுணர்வு! |
| | |



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# படிவம் நிரப்புதல்

## 1. நூலக உறுப்பினர் படிவம்

_______________ மாவட்ட நூலக ஆணைக்குழு

மைய / கிளை / ஊர்ப்புற நூலக____________________________________

**உறுப்பினர் சேர்க்கை அட்டை**

அட்டை எண் | உறுப்பினர் எண்

நான் _______ நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ__________, சந்தா

1. பெயர் ____________________________
2. தந்தை பெயர் ____________________________
3. பிறந்த தேதி ____________________________
4. வயது ____________________________
5. படிப்பு ____________________________
6. தொலைப்பேசி ____________________________
7. முகவரி ____________________________
   (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) ____________________________

தொகை ரூ__________ ஆக மொத்தம் ரூ. __________ ரொக்கமாகச் செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்

இடம் :
நாள் :

தங்கள் உண்மையுள்ள

திரு / திருமதி / செல்வி / செல்வன் _____________ அவர்களை எனக்கு நன்கு தெரியும் என சான்று அளிக்கிறேன்.

பிணைப்பாளர் கையொப்பம்
(பதவி மற்றும் அலுவலகம்)

அலுவலக முத்திரை



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## 2. மேல்நிலை வகுப்பு - சேர்க்கை விண்ணப்பம்

சேர்க்கை எண்: தேதி: வகுப்பும் பிரிவும்:

1. மாணவ / மாணவியின் பெயர் :
2. பிறந்த தேதி :
3. தேசிய இனம் :
4. பெற்றொர் / பாதுகாவலர் பெயர் :
5. வீட்டு முகவரி :
6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு :
7. பயின்ற மொழி :
8. பெற்ற மதிப்பெண்கள் :
9. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி :

| தேர்வின் பெயர் | பதிவு எண் - ஆண்டு | பாடம் | மதிப்பெண்கள்(100) |
|---|---|---|---|
| | | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| | | கணிதம் | |
| | | அறிவியல் | |
| | | சமூக அறிவியல் | |
| | | மொத்தம் | |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? :
11. தாய்மொழி :
12. சேர விரும்பும் படப் பிரிவும் பயிற்று மொழியும் :

மாணவ / மாணவியின் கையெழுத்து



www.Padasalai.Net

## 3. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பப் படிவம்

1. மாணவரின் பெயர் :
2. பாலினம் :
3. பிறந்த தேதி :
4. தேசிய இனம் :
5. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :
6. இரத்த வகை :
7. உயரம் மற்றும் எடை :
8. வீட்டு முகவரி :
9. தொலைப்பேசி / அலைபேசி எண் :
10. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு :
11. பள்ளியின் முகவரி :
12. சேரவிரும்பும் விளையாட்டு :

சேர்க்கை எண் : மாணவரிண் கையெழுத்து

தேதி :

இடம் : பெற்றோர் / பாதுகாவலரின் கையெழுத்து



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## 4. பணி வாய்ப்பு வேண்டி தன்விவரப் பட்டியலை நிரப்புதல்

1. பெயர் :
2. பாலினம் :
3. பிறந்த தேதி மற்றும் வயது :
4. தேசிய இனம் :
5. பெற்றொர் / பாதுகாவலர் பெயர் :
6. வீட்டு முகவரி :
7. தொலைப்பேசி / அலைபேசி எண் :
8. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் :
9. தாய்மொழி :
10. பயின்ற மொழிகள் :
11. தட்டச்சு :
12. கணினி :

மேற்கண்ட விபரங்கள் அனைத்தும் உண்மையென உறுதிகூறுகிறேன். தங்கள் நிறுவனத்தில் ____________ பணியினைத் தந்தால் என் பணியைச் சிறப்பாகவும் உண்மையாகவும் செய்வேன் என உறுதியளிக்கிறேன்.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள



www.Padasalai.Net

இயல் ஒன்று

மொழி

# அமுத ஊற்று

**பலவுள் தெரிக:**

1) **'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது-**

அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்

ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்

இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்

ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

2) **'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது -**

அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்

இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

3) **எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும் -**

அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா

இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

4) **'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' - தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே -**

அ) பாடிய; கேட்டவர் ஆ) பாடல்; பாடிய

இ) கேட்டவர்; பாடிய ஈ) பாடல்; கேட்டவர்

5) **வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை -**

அ) குலை வகை ஆ) மணி வகை

இ) கொழுந்து வகை ஈ) இலை வக



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## குறுவினா:

1) 'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

2) "மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!" - இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங்காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

3) ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.
ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.
ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.
மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி, எஞ்சிய பிழையான தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.

4) "உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண் வற்றாகும் கீழ்" -இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி, அதன் இலக்கணம் தருக.

5) தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

## சிறுவினா

1) தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

2) 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது.'
இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

3) 'அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது' இவை அனைத்தையும் யாம் அறிவோம். அதுபற்றி உமது அறிவுரை எமக்குத் தேவை இல்லை. எல்லாம் எமக்குத் தெரியும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

இக்கூற்றில் வண்ண எழுத்துகளில் உள்ள வினைமுற்றுகளைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.

4) தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.

## நெடுவினா

1) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

2) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

3) ஒரு பக்க அளவில் உரையாடல் எழுதுக.

சூழல் - வெளிநாட்டிலிருந்து உங்கள் இல்லத்திற்கு வந்திருக்கும் உறவினரின் மகளுக்குத் தமிழ் மொழியைப் பேச மட்டுமே தெரியும். ஆங்கில இலக்கியம் படித்த அவரிடம் தமிழ் உரைநடையின் சிறப்புப் பற்றி உரையாடுதல்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

இயல் இரண்டு

இயற்கை, சுற்றுச்சூழல்

# உயிரின் ஓசை

## பலவுள் தெரிக.

1) "உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம் உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்" - பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை?

அ) உருவகம், எதுகை  ஆ) மோனை, எதுகை

இ) முரண், இயைபு  ஈ) உவமை, எதுகை

2) செய்தி 1 - ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 15ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.

செய்தி 2 - காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே.

செய்தி 3 - காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல்கடந்து வணிகம்செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்!

அ) செய்தி 1 மட்டும் சரி  ஆ) செய்தி 1, 2 ஆகியன சரி

இ) செய்தி 3 மட்டும் சரி  ஈ) செய்தி 1, 3 ஆகியன சரி

3) "பாடுஇமிழ் பனிக்கடல் பருகி" என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?

அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல்  ஆ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்

இ) கடல் நீர் ஒலித்தல்  ஈ) கடல் நீர் கொந்தளித்தல்

4) 'பெரிய மீசை' சிரித்தார் - வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது?

அ) பண்புத்தொகை  ஆ) உவமைத்தொகை

இ) அன்மொழித்தொகை  ஈ) உம்மைத்தொகை



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

5) **பொருந்தும் விடைவரிசையைத் தேர்ந்தெடுக்க.**

அ) கொண்டல் - 1. மேற்கு

ஆ) கோடை - 2. தெற்கு

இ) வாடை - 3. கிழக்கு

ஈ) தென்றல் - 4. வடக்கு

அ) 1, 2, 3, 4 ஆ) 3, 1, 4, 2 இ) 4, 3, 2, 1 ஈ) 3, 4, 1, 2

## குறுவினா

1) 'நமக்கு உயிர் காற்று
காற்றுக்கு வரம் மரம் - மரங்களை
வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்' - இதுபோன்று உலகக் காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத்தொடர்களை எழுதுக.
2) வசன கவிதை - குறிப்பு வரைக.
3) தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைநிலைத் தொடர்களை விரித்து எழுதுக; தொடரில் அமைக்க.
4) பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதமாகும்போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.
5) மாஅல் - பொருளும் இலக்கணக் குறிப்பும் தருக.

## சிறுவினா

1) உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசையிலும் நான், இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக நான்.....முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றிப் பேசுகிறது. இவ்வாறு 'நீர்' தன்னைப் பற்றிப் பேசினால்..... உங்களுடைய கற்பனையில் தலைப்புகளை எழுதுக.
2) சோலைக்(பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வதுபோல் ஓர் உரையாடல் அமைக்க.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

3) தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும்வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள்வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள். இப்பத்தியில் உள்ள தொகைநிலைத் தொடர்களின் வகைகளைக் குறிப்பிட்டு, விரித்து எழுதுக.

4) மழைநின்றவுடன் புலப்படும் காட்சியை வருணித்து எழுதுக. குறிப்பு: இலைகளில் சொட்டும் நீர் - உடலில் ஓடும் மெல்லிய குளிர் - தேங்கிய குட்டையில் 'சளப் தளப்' என்று குதிக்கும் குழந்தைகள் - ஓடும் நீரில் காகிதக் கப்பல்.

## நெடுவினா

1) முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

2) புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

3) மலர்ந்தும் மலராத பாதிமலர் போல
வளரும் விழி வண்ணமே - வந்து
விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக
விளைந்த கலை அன்னமே
நதியில் விளையாடி கொடியில் தலைசீவி
நடந்த இளந் தென்றலே - வளர்
பொதிகை மலைதோன்றி மதுரை நகர் கண்டு
பொலிந்த தமிழ் மன்றமே

- கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் காற்றையும் கவிதை நயத்தையும் பாராட்டி உரைசெய்க.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

இயல் மூன்று

பண்பாடு

# கூட்டாஞ்சோறு

## பலவுள் தெரிக.

1) **பின்வருவனவற்றுள் முறையான தொடர் -**

அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு.

ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு.

இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.

ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு.

2) **"சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி" என்னும் அடியில் பாக்கம் என்பது-**

அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

3) **அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது -**

அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய்

இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

4) **காசிக்காண்டம் என்பது -**

அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல்

ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்

இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்

ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

5) 'விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு'. இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை -

அ) நிலத்திற்கேற்ற விருந்து ஆ) இன்மையிலும் விருந்து

இ) அல்லிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து

## குறுவினா

1) விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.
2) 'தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குற்றியெடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி' என்பது இலக்கியச் செய்தி. விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியமையாத ஒன்றா? உங்கள் கருத்தைக் குறிப்பிடுக.
3) 'எழுது என்றாள்' என்பது விரைவு காரணமாக 'எழுது எழுது என்றாள்' என அடுக்குத்தொடரானது. 'சிரித்துப் பேசினார் ' என்பது எவ்வாறு அடுக்குத்தொடராகும்?
4) 'இறடிப் பொம்மல் பெறுகுவிர்' - இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.
5) பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார்? ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?

## சிறுவினா

1) 'கண்ணே கண்ணுறங்கு!
காலையில் நீயெழும்பு!
மாமழை பெய்கையிலே
மாம்பூவே கண்ணுறங்கு!
பாடினேன் தாலாட்டு!
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு!' - இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

2) முல்லை நிலத்திலிருந்தும் மருத நிலத்திலிருந்தும் கிடைக்கும் உணவுப் பொருள்கள் யாவை?

3) • புதியதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் அதில் தலை வைக்கத் திண்டும் அமைத்தனர்.

• திருவிழாக் காலங்களில் ஊருக்கு வரும் புதியவர்களையும் அழைத்து அன்போடு விருந்தளிப்பதைச் சில இடங்களில் காணமுடிகிறது.

இப்படியாகக் காலமாற்றம், தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்த கருத்துகளை எழுதுக.

4) கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

## நெடுவினா

1) ஆற்றுப்படுத்தல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களை நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக.

2) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

3) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

இயல் நான்கு

அறிவியல், தொழில்நுட்பம்

# நான்காம் தமிழ்

## பலவுள் தெரிக.

1) 'உனதருளே பார்ப்பன் அடியேனே' - யாரிடம் யார் கூறியது?

அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்

இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்

2) தலைப்புக்கும் குறிப்புகளுக்கும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.

தலைப்பு : செயற்கை நுண்ணறிவு

குறிப்புகள் : கண்காணிப்புக் கருவி, அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறது. திறன்பேசியில் உள்ள வரைபடம் போக்குவரத்திற்குச் சுருக்கமான வழியைக் காண்பிப்பது.

அ) தலைப்புக்குப் பொருத்தமான குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

ஆ) குறிப்புகளுக்குத் தொடர்பில்லாத தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

இ) தலைப்புக்குத் தொடர்பில்லாத குறிப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

ஈ) குறிப்புகளுக்குப் பொருத்தமில்லாத தலைப்பு வழங்கப்பட்டுள்ளது.

3) பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?

அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்

இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

4) குலசேகர ஆழ்வார் 'வித்துவக்கோட்டம்மா' என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார். பூனையார் பால்சோற்றைக் கண்டதும் வருகிறார் ஆகிய தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதி முறையே -

அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி

ஆ) இடவழுவமைதி, மரபு வழுவமைதி

இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி

ஈ) கால வழுவமைதி, இடவழுவமைதி

5) பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?

அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா

## குறுவினா

1) வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.

எ.கா. செயற்கை நுண்ணறிவால் இயங்கும் போக்குவரத்து ஊர்திகள்.

2) வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய்மொழிக்குச் செல்கிறேன் - இத்தொடர் கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?

3) மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.

4) உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல்வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.

5) "சீசர் எப்போதும் என் சொல்பேச்சைக் கேட்பான். புதியவர்களைப் பார்த்துக் கத்துவானே தவிர கடிக்க மாட்டான்" என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார் - இதில் உள்ள திணை வழுவமைதிகளைத் திருத்தி எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## சிறுவினா

1) "மாளாத காதல் நோயாளன் போல்" என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.
2) இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.
3) மனிதர்களின் மூளையைப் போன்றது, செயற்கை நுண்ணறிவு கொண்ட கணினியின் மென்பொருள். மனிதனைப் போலவே பேச, எழுத, சிந்திக்க இத்தொழில்நுட்பம் மேம்படுத்தப்படுகிறது. இதனால் மனிதகுலத்துக்கு ஏற்படுகிற நன்மைகளைப் பற்றி அறிவியல் இதழ் ஒன்றுக்கு 'எதிர்காலத் தொழில்நுட்பம்' என்ற தலைப்பில் எழுதுக.
4) நேற்றிரவு பெய்த மழை எல்லாம் தொட்டியை நிறைத்திருந்தது. வாழைத் தோப்பில் குட்டியுடன் நின்றிருந்த மாடு கத்தியது; தந்தை என்னிடம், "இலச்சுமி கூப்பிடுகிறாள், போய்ப் பார்" என்றார். "இதோ சென்றுவிட்டேன்" என்றவாறே அங்குச் சென்றேன். துள்ளிய குட்டியைத் தடவிக்கொடுத்து, "என்னடா விளையாடவேண்டுமா?" என்று கேட்டு அவனை அவிழ்த்துவிட்டேன். என் தங்கை அங்கே வந்தாள். அவளிடம், "நீயும் இவனும் விளையாடுங்கள்" என்று கூறினேன். அவிழ்த்துவிடப்பட்ட இலச்சுமி தொட்டியிலிருந்த நீரைக் குடித்தாள்.
இப்பத்தியிலுள்ள வழுவமைதிகளைப் பட்டியலிட்டு எழுதுக.

## நெடுவினா

1) ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறைகொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்றுவிடுமா? இக்கருத்துகளை ஒட்டிச் 'செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள்' பற்றி ஒரு கட்டுரை எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

2) நம் முன்னோர் அறிவியல் கருத்துகளை இயற்கையுடன் இணைத்துக் கூறுவதாகத் தொடங்குகின்ற பின்வரும் சொற்பொழிவைத் தொடர்ந்து நிறைவு செய்க.

பேரன்பிற்குரிய அவையோர் அனைவருக்கும் வணக்கம்! இன்று இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழுடன் அறிவியலை நான்காம் தமிழாகக் கூறுகின்றனர். ஆதிகாலந்தொட்டு இயங்கிவரும் தமிழ்மொழியில் அறிவியல் என்பது தமிழர் வாழ்வியலோடு கலந்து கரைந்து வந்துள்ளதை இலக்கியங்கள் மூலம் அறிகிறோம். அண்டத்தை அளந்தும், புவியின் தோற்றத்தை ஊகித்தும் கூறும் அறிவியல் செய்திகள் இலக்கியங்களில் உள்ளன. சங்க இலக்கியமான பரிபாடலில்......

3) "அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம்" என்னும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்று எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

இயல் ஐந்து

கல்வி

# மணற்கேணி

## பலவுள் தெரிக.

1) 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம்வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி

அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

2) அருந்துணை என்பதைப் பிரித்தால்.....................

அ) அருமை + துணை ஆ) அரு + துணை

இ) அருமை + இணை ஈ) அரு + இணை

3) "இங்கு நகரப் பேருந்து நிற்குமா?" என்று வழிப்போக்கர் கேட்டது ........ வினா. "அதோ, அங்கே நிற்கும்." என்று மற்றொருவர் கூறியது .......... விடை.

அ) ஐயவினா, வினா எதிர் வினாதல்

ஆ)அறிவினா, மறை விடை

இ) அறியா வினா, சுட்டு விடை

ஈ) கொளல் வினா, இனமொழி விடை

4) "அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி மருளை அகற்றி மதிக்கும் தெருளை" - என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?

அ) தமிழ் ஆ) அறிவியல் இ) கல்வி ஈ) இலக்கியம்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

5) இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ......... இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர்.............

அ) அமைச்சர், மன்னன் ஆ) அமைச்சர், இறைவன்

இ) இறைவன், மன்னன் ஈ) மன்னன், இறைவன்

## குறுவினா

1) "கழிந்த பெரும் கேள்வியினான் எனக் கேட்டு முழுது உணர்ந்த கபிலன் தன் பால் பொழிந்த பெரும் காதல்மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன் தென்சொல்"
- இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார்? காதல்மிகு கேண்மையினான் யார்?

2) செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.

3) அமர்ந்தான் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

4) தாய்மொழியும்ஆங்கிலமும் தவிர நீங்கள் கற்க விரும்பும் மொழியினைக் குறிப்பிட்டுக் காரணம் எழுதுக.

5) இந்த அறை இருட்டாக இருக்கிறது. மின்விளக்கின் சொடுக்கி எந்தப் பக்கம் இருக்கிறது?
இதோ... இருக்கிறதே! சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே! மின்சாரம் இருக்கிறதா, இல்லையா?
மேற்கண்ட உரையாடலில் உள்ள வினாக்களின் வகைகளை எடுத்தெழுதுக.

## சிறுவினா

1) மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

2) உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?

3) **ஐக்கிய நாடுகள் அவையில் மொழிபெயர்ப்பு**

ஐ.நா.அவையில் ஒருவர் பேசினால் அவரவர் மொழிகளில் புரிந்துகொள்வதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. மொழிபெயர்ப்பு (translation) என்பது எழுதப்பட்டதை மொழிபெயர்ப்பது; ஆனால் ஒருவர் பேசும்போதே மொழிபெயர்ப்பது விளக்குவது (Interpreting) என்றே சொல்லப்படுகிறது. ஐ.நா.அவையில் ஒருவர் பேசு வதை மொழிபெயர்க்கும் மொழிபெயர்ப்பாளர் பார்வையாளர்களுக்குத் தெரியாதபடி வேறு இடத்தில் இருப்பார். ஒருவர் பேசுவதைக் காதணிகேட்பியில் (Headphone) கேட்டபடி சில நொடிகளில் மொழிபெயர்த்து ஒலிவாங்கி வழியே பேசுவார். அவையில் உள்ள பார்வையாளர் தம்முன் உள்ள காதணிகேட்பியை எடுத்துப் பொருத்திக்கொண்டு அவரது மொழியில் புரிந்துகொள்வார்.

இப்பகுதியிலிருந்து ஐந்து வினாக்களை உருவாக்குக.

4) முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.
இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.

## நெடுவினா

1) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.
2) 'கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே' என்கிறது வெற்றிவேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

3) தமிழின் இலக்கிய வளம் - கல்வி மொழி - பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் - அறிவியல் கருத்துகள் - பிறதுறைக் கருத்துகள் - தமிழுக்குச் செழுமை - மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு 'செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை' என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்கக் கட்டுரை எழுதுக.

www.Padasalai.Net



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

இயல் ஆறு
கலை, அழகியல், புதுமை

# நிலா முற்றம்

## பலவுள் தெரிக.

1) குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் .............

அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள்

ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்

இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்

ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

2) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுகின்றனர். இத்தொடரின் செயப்பாட்டு வினைத் தொடர் எது?

அ) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுவர்.

ஆ) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.

இ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.

ஈ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகின்றனர்.

3) மலர்கள் தரையில் நழுவும். எப்போது?

அ) அள்ளி முகர்ந்தால். ஆ) தளரப் பிணைத்தால்.

இ) இறுக்கி முடிச்சிட்டால். ஈ) காம்பு முறிந்தால்.

4) கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர். இத்தொடருக்கான வினா எது?

அ) கரகாட்டம் என்றால் என்ன?

ஆ) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும்?

இ) கரகாட்டத்தின் வேறுவேறு வடிவங்கள் யாவை?

ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

5) கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?

அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால்

ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்

இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால்

ஈ) அங்கு வறுமை இல்லாததால்

## குறுவினா

1) காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச் சுவை மிகுந்திருக்கும். இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள், கருப்"பொருள்களை வகைப்படுத்தி எழுதுக.

2) நேற்று நான் பார்த்த அருச்சுனன் தபசு என்ற கூத்தில் அழகிய ஒப்பனையையும் சிறந்த நடிப்பையும் இனிய பாடல்களையும் நுகர்ந்து மிக மகிழ்ந்தேன்!" என்று சேகர் என்னிடம் கூறினான். இக்கூற்றை அயற்கூற்றாக எழுதுக.

3) உறங்குகின்ற கும்பகன்ன 'எழுந்திராய் எழுந்திராய்'
காலதூதர் கையிலே 'உறங்குவாய் உறங்குவாய்'
கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?

4) சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச்
சுமக்கின்றன ஒல்லித் தண்டுகள் - இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக.

5) கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.
உழவர்கள் மலையில் உழுதனர்.
முல்லைப் பூச் செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

### சிறுவினா

1) வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.

2) நவீன கவிதையில் வெளிப்படும் நுண்மை உள்ளம், பூத்தொடுக்கும் நாட்டுப்புறப் பாடலில் வெளிப்படுகிறது. ஒப்பிட்டு எழுதுக.

| | |
|---|---|
| இறுக்கி முடிச்சிட்டால்<br>காம்புகளின் கழுத்து முறியும்.<br>தளரப் பிணைத்தால்<br>மலர்கள் தரையில் நழுவும்.<br>வாசலில் மரணம் நிற்பதறிந்தும்<br>வருந்தாமல் சிரிக்கும்<br>இந்தப் பூவை<br>எப்படித் தொடுக்க நான்<br>நவீன கவிதை | கையாலே பூவெடுத்தா - மாரிக்குக்<br>காம்பழுகிப் போகுமின்னு<br>விரலாலே பூவெடுத்தா - மாரிக்கு<br>வெம்பி விடுமென்று சொல்லி<br>தங்கத் துரட்டி கொண்டு - மாரிக்குத்<br>தாங்கி மலரெடுத்தார்<br>நாட்டுப்புறப் பாடல் |

3) 'கடற்கரையில் உப்புக் காய்ச்சுதல் நடைபெறுகிறது; மலைப் பகுதிகளில் மலைப் பயிர்களும் நிலப் பகுதிகளில் உழவுத் தொழிலும் நடைபெறுகின்றன.' -காலப்போக்கில் பல மாற்றங்கள் நிகழ்ந்தபோதிலும், பண்டைத் தமிழரின் திணைநிலைத் தொழில்கள் இன்றளவும் தொடர்வதையும் அவற்றின் இன்றைய வளர்ச்சியையும் எழுதுக.

4) படங்கள் வெளிப்படுத்தும் நிகழ்த்துகலை குறித்து இரண்டு வினாக்களையும் அவற்றுக்கான விடைகளையும் எழுதுக.







Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## நெடுவினா

1) நெகிழிப் பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது. அதற்குப் பாராட்டுரை ஒன்றினை எழுதுக.

2) நிகழ்கலை வடிவங்கள் - அவை நிகழும் இடங்கள் - அவற்றின் ஒப்பனைகள் - சிறப்பும் பழைமையும் -இத்தகைய மக்கள் கலைகள் அருகிவருவதற்கான காரணங்கள் - அவற்றை வளர்த்தெடுக்க நாம் செய்யவேண்டுவன - இவை குறித்து நாளிதழுக்கான தலையங்கம் எழுதுக.

3) சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன் என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக.

அன்பும் பண்பும் கொண்ட தலைவர் அவர்களே! தேர்ந்தெடுத்த பூக்களைப் போன்று வரிசை தொடுத்து அமர்ந்திருக்கும் ஆன்றோர்களே! அறிஞர் பெருமக்களே! வணக்கம். இயற்கை கொலு வீற்றிருக்கும் காட்சியைப் பெரிய கலைநிகழ்வே நடப்பதான தோற்றமாகக் கம்பன் காட்டும் கவி... தண்டலை மயில்கள் ஆட...

இவ்வுரையைத் தொடர்க!



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

இயல் ஏழு
நாகரிகம்,
நாடு, சமூகம்

# விதை நெல்

## பலவுள் தெரிக.

1) சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க.

அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு

இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்

2) 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' -
மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே -

அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்

இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

3) 'தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்' என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள் -

அ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர்

ஆ) மிகுந்த செல்வம் உடையவர்

இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர்

ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்

4) இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் ............

அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்

இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

5) தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது ...........

அ) திருக்குறள் ஆ) புறநானூறு

இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## குறுவினா

1) பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?
2) மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?
3) வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.
4) புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.
5) பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறியிடுக.
பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக்கூறி சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன் - ம.பொ.சி.

## சிறுவினா

1) 'முதல்மழை விழுந்ததும்' என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவிபாடுகிறார்?
2) அவந்தி நாட்டு மன்னன், மருதநாட்டு மன்னனுடன் போர் புரிந்து அந்நாட்டைக் கைப்பற்ற நினைக்கிறான்; அப்போர் நிகழ்வைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் இலக்கணத்தின் வழி விளக்குக.
3) "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" இடம் சுட்டிப் பொருள் விளக்குக.
4) "பகர்வனர் திரிதிரு நகரவீதியும்;
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்;
தூசும் துகிரும் ஆரமும் அகிலும்"



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

அ) இவ்வடிகள் இடம்பெற்ற நூல் எது?

ஆ) பாடலில் அமைந்த மோனையை எடுத்து எழுதுக.

இ) எதுகைச் சொற்களை அடிக்கோடிடுக.

ஈ) காருகர் - பொருள் தருக.

உ) இப்பாடலில் குறிப்பிடப்படும் நறுமணப் பொருள்கள் யாவை?

5) பின்வரும் பத்தியைப் படித்து மையக்கருத்தை எழுதுக.

பேரரசனது மெய்ப் புகழை எடுத்துக்கூறுவது மெய்க்கீர்த்தி. பொதுவாக இது சோழ மன்னருடைய சாசனங்களின் தொடக்கத்தில் அரசனுடைய இத்தனையாவது ஆட்சியாண்டு என்று கூறுமிடத்து அமைக்கப்பெறும். சிறப்பாக அவனுடைய போர் வெற்றிகளையும் வரலாற்றையும் முறையாகக் கூறி, அவன் தன் தேவியோடு வீற்றிருந்து நீடு வாழ்க எனக் கூறி, பிறகே சாசனம் எழுந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடும்.

சோழ மன்னர் பரம்பரையில் மெய்க்கீர்த்தியோடு சாசனங்களைப் பொறிக்கும் வழக்கம் நெடுநாள் இருந்ததில்லை. முதல் இராசராசனுடைய எட்டாம் ஆண்டில்தான் மெய்க்கீர்த்தி காணப்படுகிறது. இதன்கண் வமிச பாரம்பரியம் விதந்து ஓதப்படவில்லை; ஏனைய பகுதிகள் உள்ளன.எனினும் இது மிகவும் சுருக்கமாகவே உள்ளது. இன்னும் பின்வந்த மெய்க்கீர்த்திகளின் வமிச பரம்பரையை மிகவும் விரித்துக் கூறியள்ளன.

## நெடுவினா

1) நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு - நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு - குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவப் பருவமும் நாட்டுப் பற்றும்' என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

2) பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள மெய்க்கீர்த்திப் பாடலின் நயத்தை விளக்குக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

3) *சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.*

4) *நிகழ்வுகளைத் தொகுத்து அறிக்கை எழுதுக*

**மகளிர் நாள்விழா**

இடம் – பள்ளிக் கலையரங்கம் நாள் – 08.03.2019

கலையரங்கத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் கூடுதல் - தலைமையாசிரியரின் வரவேற்பு - இதழாளர் கலையரசியின் சிறப்புரை – ஆசிரியர்களின் வாழ்த்துரை – மாணவத் தலைவரின் நன்றியுரை



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

இயல் எட்டு

அறம்,
தத்துவம்,
சிந்தனை

# பெருவழி

## பலவுள் தெரிக.

1) மேன்மை தரும் அறம் என்பது.......
அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது
ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது
இ) புகழ் கருதி அறம் செய்வது
ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

2) 'வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்' இவ்வடி குறிப்பிடுவது ...............
அ) காலம் மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை।
இ) இடையறாது அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை

3) உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்
அ) உதியன்; சேரலாதன் ஆ) அதியன்; பெருஞ்சாத்தன்
இ) பேகன்; கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன்; திருமுடிக்காரி

4) காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர்.........
அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது
ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது
இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம்
ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்

5) சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் ..........
அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## குறுவினா

1) 'கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க! உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது'

அ) அடியெதுகையை எடுத்தெழுதுக.

ஆ) இலக்கணக் குறிப்பு எழுதுக - கொள்க, குரைக்க

2) குறள்வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டுத் தருக.

3) குறிப்பு வரைக - அவையம்.

4) காலக் கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?

5) வஞ்சிப்பாவிற்கு உரிய ஓசை தூங்கல் ஓசை ஆகும். துள்ளல் ஓசை கலிப்பாவுக்கு உரியது. இத்தொடர்களை ஒரே தொடராக இணைத்து எழுதுக.

## சிறுவினா

1) சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

2) ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

3) 'சுற்றுச்சூழலைப் பேணுவதே இன்றைய அறம்' என்ற தலைப்பில், பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்பு ஒன்றை உருவாக்குக. (குறிப்பு - சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்கச் சட்டங்கள் இயற்றப்பட்டிருந்தாலும், ஒவ்வொருவரின் உள்ளத்திலும் ஏற்படும் மாற்றமே சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும்)

4) வாளித் தண்ணீர், சாயக் குவளை, கந்தைத் துணி, கட்டைத் தூரிகை - இச்சொற்களைத் தொடர்புபடுத்தி ஒரு பத்தி அமைக்க.

## நெடுவினா

1) பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

2) காலக்கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக.

கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!
இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்
இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை!
ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை; அறிக!

\- கண்ணதாசன்

3) குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் நாடகம் எழுதுக.

மாணவன் - கொக்கைப் போல, கோழியைப் போல - உப்பைப் போல - இருக்க வேண்டும் - கொக்கு காத்திருந்து கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளும் - குப்பையைக் கிளறினாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக்கொள்ளும் கோழி - கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் உப்பின் சுவையை உணரமுடியும் - ஆசிரியர் விளக்கம் - மாணவன் மகிழ்ச்சி.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

இயல் ஒன்பது

மனிதம், ஆளுமை

# அன்பின் மொழி

## பலவுள் தெரிக.

1) "இவள் தலையில் எழுதியதோ
கற்காலம்தான் எப்போதும் ..." - இவ்வடிகளில் கற்காலம் என்பது

அ) தலைவிதி ஆ) பழைய காலம்

இ) ஏழ்மை ஈ) தலையில் கல் சுமப்பது

2) சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது

அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்தல்

ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்

இ) அறிவியல் முன்னேற்றம்

ஈ) வெளிநாட்டு முதலீடுகள்

3) பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க என்று ................., ..................... வேண்டினார்.

அ) கருணையன், எலிசபெத்துக்காக ஆ) எலிசபெத், தமக்காக

இ) கருணையன், பூக்களுக்காக ஈ) எலிசபெத், பூமிக்காக

4) வாய்மையே மழைநீராகி - இத் தொடரில் வெளிப்படும் அணி

அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்

5) கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன் - இக்கூற்றிலிருந்து நாம் புரிந்துகொள்வது:

அ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்

ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்




Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

இ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார்

ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்

## குறுவினா

1) தீவக அணியின் வகைகள் யாவை?
2) நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு இத்தொடரை இரு தொடர்களாக்குக.
3) "காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்" - உவமை உணர்த்தும் கருத்து யாது?
4) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது - இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது?



5) 'வாழ்வில் தலைக்கனம்', 'தலைக்கனமே வாழ்வு' என்று நாகூர்ரூமி யாருடைய வாழ்வைக் குறித்துக் கூறுகிறார்?



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## சிறுவினா

1) "சித்தாளின் மனச்சுமைகள்
செங்கற்கள் அறியாது" - இடஞ்சுட்டிப் பொருள் தருக.
2) ஜெயகாந்தன் தம் கதைமாந்தர்களின் சிறந்த கூறுகளைக் குறிப்பிடத் தவறுவதில்லை என்று அசோகமித்திரன் கூறுகிறார். இக்கூற்றை மெய்ப்பிக்கும் செயல் ஒன்றைத் 'தர்க்கத்திற்கு அப்பால்' கதை மாந்தர் வாயிலாக விளக்குக.
3) எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?
4) கவிஞர் தாம் கூறவிரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக்காட்டுக.

## நெடுவினா

1) கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.
2) ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழை, வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைத்து அளிக்க.
3) 'அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# மாதிரி வினாத்தாள் - 1 (10 பத்தாம் வகுப்பு)

## மொழிப்பாடம் - தமிழ்

நேரம்: 3.00 மணிமதிப்பெண்கள் : 100

### பகுதி -I (மதிப்பெண்கள் - 15)

15 × 1 = 15

1. 'சாகும்போதும் தமிழ்ப்படித்துச் சாகவேண்டும் என்றன் சாம்பலும் தமிழ்மணந்து வேக வேண்டும்' - என்று கூறியவர்
   அ. கால்டுவெல் ஆ. க.சச்சிதானந்தன்
   இ. வீரமாமுனிவர் ஈ. தமிழழகனார்

2. திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம் என்ற நூலை எழுதியவர்
   அ. தொல்காப்பியர் ஆ. அகத்தியர்
   இ. கால்டுவெல் ஈ. வீரமாமுனிவர்

3. 'நாடும் மொழியும் நமதிரு கண்கள்' என்று பாடியவர்
   அ. பாரதியார் ஆ. பாரதிதாசன்
   இ. தேவநேய பாவாணார் ஈ. அப்பாத்துரையார்.க

4. விழிகளை இழக்க நேரிட்டாலும் தாய்த் தமிழினை இழந்து விடக் கூடாது என எண்ணியவர்
   அ. திரு.வி.க ஆ. இரா. இளங்குமரனார்
   இ. பாரதியார் ஈ. கால்டுவெல்

5. உரனசைஇ, வரனசைஇ என்பது ______________ அளபெடை
   அ. செய்யுளிசை அளபெடை ஆ. இன்னிசை அளபெடை
   இ. ஒற்றளபெடை ஈ. சொல்லிசை அளபெடை

6. கெடுப்பதூஉம், எடுப்பதூஉம் என்பது எந்த அளபெடை
   அ. சொல்லிசை அளபெடை ஆ. ஒற்றளபெடை
   இ. இன்னிசை அளபெடை ஈ. செய்யுளிசை அளபெடை



www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

7. **உலகம் ஐம்பூதங்களால் ஆனது என்று கூறியவர்**

அ. தொல்காப்பியர் ஆ. திருமூலர்

இ. ஔவையார் ஈ. வெண்ணிக் குயத்தியார்

8. **முல்லைப் பாட்டு ____________ அடிகளை கொண்டது.**

அ. 105 ஆ. 103

இ. 583 ஈ. 70

9. **'காற்றின் ஆற்றலை வளி மிகின் வலி இல்லை' என்று சிறப்பித்தவர்**

அ. ஔவையார் ஆ. இளநாகனார்

இ. ஐயூர்முடவனார் ஈ. இள்ளங்கோவடிகள்

10. **இந்தியா, சுதேசமித்திரன் இதழ்களின் ஆசிரியர்**

அ. தமிழழகனார் ஆ. பாரதிதாசன்

இ. பெருஞ்சித்திரனார் ஈ. பாரதியார்

11. **வீசுதென்றல், கொல்களிறு என்பதன் இலக்கணக் குறிப்பு**

அ. வினைத்தொகை ஆ. பண்புத்தொகை

இ. வேற்றுமைத்தொகை ஈ. அன்மொழித்தொகை

**பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி:**

நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர் செல, நிமிர்ந்த மாஅல் போல,
பாடு இமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு,
அருங்கடி மூதூர் மருங்கில் போகி
யாழ்இசை இன வண்டு ஆர்ப்ப, நெல்லொடு
நாழி கொண்ட, நறுவீ முல்லை.

12. **இப்பாடல் இடம் பெற்ற நூல்?**

அ. பரிபாடல் ஆ. முல்லைப் பாட்டு

இ. மலைபடுகடாம் ஈ. காசிக்காண்டம்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

13. **இப்பாடலின் ஆசிரியர்**
அ. தமிழழகனார் ஆ. அதிவீரராம பாண்டியன்
இ. பெருங்கௌசிகனார் ஈ. நப்பூதனார்

14. **மூதூர் என்பதன் இலக்கணக் குறிப்பு**
அ. பண்புத்தொகை ஆ. வினைத்தொகை
இ. அன்மொழித்தொகை ஈ. உரிச்சொல்

15. **'நனந்தலை உலகம்' - பொருள்**
அ. சிறிய உலகம் ஆ. நனைந்த உலகம்
இ. சுற்றும் உலகம் ஈ. அகன்ற உலகம்

**பகுதி - II ( மதிப்பெண்கள் - 18)**
**பிரிவு - 1**

**4 × 2 = 8**

**எவையேனும் 4 வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளி:**
**(21 - வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்)**

16. **விடைக்கேற்ற வினா அமைக்க.**
**அ.** திரு. வி. க போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலை கொண்டவர் தமிழ்த்திரு இரா. இளங்குமரனார்.
**ஆ.** உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியா.
17. சிலேடை அணி என்றால் என்ன? எ.கா ஒன்று தருக.
18. தாவரங்களின் பிஞ்சு வகைகளுக்கு 4 சான்றுகள் தருக?
19. வசனகவிதை குறிப்பு வரை ?
20. முத்தமிழ், முச்சங்குகள், முச்சங்கங்ககள் எழுதுக ?
21. 'தரும்' - என முடியும் திருக்குறளை எழுதுக ?


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**பிரிவு - 2**

5 × 2 = 10

**எவையேனும் 5 வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளி:**

22. **வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றி தொடர்களை இணைக்க.**
ஊட்டமிகு உணவு உண்டவர். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.
23. **சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்துக.**
தேணீலே ஊரிய செந்தமிழின் - சுவை
தேரும் சிலப்பதி காறமதை.
24. **கலைச் சொற்கள் தருக.**
CONVERSATION STORM
25. **சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.**
முத்துப்பல்
26. தொழிற்பெயருக்கும், வினையாலணையும் பெயருக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் இரண்டினை எழுதுக?
27. பொதுமொழிக்கு சான்றுகள் தந்து விளக்கு?
28. **பகுபத உறுப்பிலக்கணம் தருக.**
பொறித்த

**பகுதி - III (மதிப்பெண்கள் - 18)**

**பிரிவு - 1**

2 × 3 = 6

**எவையேனும் 2 வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி:**

29. சோலை (பூங்கா) காற்றும், மின்விசிறிக் காற்றும் பேசிக் கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க?
30. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது' இதுபோல் இளம்பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க?



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

நான் வீசுகின்ற திசையைக் கொண்டும் தமிழர்கள் எனக்குப் பெயர் சூட்டியுள்ளனர். கிழக்கு என்பதற்கு குணக்கு என்னும் பெயருண்டு. கிழக்கிலிருந்து வீசும் காற்று கொண்டல் எனப்படும். மேற்கு என்பதற்கு குடக்கு என்னும் பெயருமுண்டு. வடக்கிலிருந்து வீசும் காற்று ஊதைக் காற்று என்றும் அழைக்கப்படுகிறது. தெற்கிலிருந்து வீசும் காற்று தென்றல் காற்று எனப்படும்.

**அ) கிழக்கிலிருந்து வீசும் காற்று எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

**ஆ) ஊதைக் காற்று எந்த திசையிலிருந்து வீசப்படுகிறது?**

**இ) இப்பகுதிக்கு பொருத்தமான தலைப்பு தருக?**

**பிரிவு - 2**

2 × 3 = 6

**எவையேனும் 2 வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி:**

**(34 - வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்)**

32. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக?

33. தமிழன்னை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

34. **அடிபிறழாமல் எழுதுக.**

"சிறுதாம்பு தொடுத்த" எனத் தொடங்கும் முல்லைப்பாட்டு பாடலை எழுதுக.

**(அல்லது)**

"அன்னை மொழியே!" எனத் தொடங்கும் கனிச்சாறு பாடலை எழுதுக

**பிரிவு - 3**

2 × 3 = 6

**எவையேனும் 2 வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி:**

35. தொகாநிலைத் தொடரின் வகைகளைக் கூறி ஏதேனும் இரண்டினை மட்டும் விளக்குக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

36. **உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்**

- இக்குறட்பாவிற்கு அலக்கிட்டு வாய்பாடு தருக.

37. நிரல்நிறை அணி - விளக்கம் தருக.

**பிரிவு - 4 (மதிப்பெண்கள் - 25)**

5 × 5 = 25

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:**

38. அ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப் பேச்சு ஒன்றை உருவாக்குக்க.

**(அல்லது)**

ஆ) முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

39. அ) மாநில அளவில் நடைப்பெற்ற "மரம் இயற்கையின் வரம்" என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

**(அல்லது)**

ஆ) உணவு விடுதியொன்றில் வழங்க பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உணவு பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

40. **படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக.**





www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

41. நூலக உறுப்பினர் படிவம் எழுதுக.

42. அ)

| | |
|---|---|
| புயலின்போது வெளியே செல்ல வேண்டாம் | வெளியேற நேர்ந்தால் ஆரம்பகட்ட எச்சரிக்கையின் போதே வெளியேறவும் |
| தொலைபேசி, மின்சாதனங்கள் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும் | மாடியில் இருப்பதைத் தவிர்த்து தளப் பகுதியிலேயே தங்கவும் |
| வானொலி அறிவிப்பை கேட்டு பின்பற்றவும் | காற்று அடிப்பது நின்றாலும் எதிர்த் திசையிலிருந்து மறுபடி வேகமாக வீச ஆரம்பிக்கும் |

மேற்கண்ட அறிவிப்பைகேட்ட நீங்கள், உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக.

(அல்லது)

ஆ) மொழி பெயர்க்க:

The golden sun gets up early in the morning and strat its bright rays to fade away the dark. The milky cloud start the wondering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flower. The flower fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes every thing pleasnt.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## பகுதி - IV
## (மதிப்பெண்கள் - 24)

3 × 8 = 24

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:**

43. அ) மலர்ந்தும் மலராத பாதிமலர் போல
வளரும் விழி வண்ணமே - வந்து
விடிந்தும் முடியாத காலைப் பொழுதாக
விளைந்த கலை அன்னமே
நதியில் விளையாடி கொடியில் தலைசீவி
நடந்த இளந்தென்றலே - வளர்
பொதிகை மலைதோன்றி மதுரை நகர்
பொலிந்த தமிழ் மன்றமே.

- கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் காற்றையும் கவிதைநயத்தையும் பாராட்டி உரை செய்க.

**(அல்லது)**

ஆ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

44. அ) புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக் குறிப்புச் சொற்களும் தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

**(அல்லது)**

ஆ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

*45.* ***அ)*** *குமரிக் கடல்முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாக்க கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். அவ்வன்னைக்கு பிள்ளைத் தமிழ் பேசி, சதகம் அமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி அழகு கூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப புலவர்கள்.*

*இக்கருத்தை கருவாகக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.*

***(அல்லது)***

***ஆ)*** *தலைப்பு 'விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்' கட்டுரை எழுதுக.*



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# மாதிரி வினாத்தாள் - 2 (10 பத்தாம் வகுப்பு)

## மொழிப்பாடம் - தமிழ்

நேரம்: 3.00 மணி மதிப்பெண்கள் : 100

### பகுதி -I (மதிப்பெண்கள் - 15)

15 × 1 = 15

1. பரிபாடல் அடியில் விரும்பும் இசையும் என்னும்தொடர்பு எதனைக் குறிக்கிறது
   அ. வானத்தையும்பாட்டையும் ஆ. வானத்தையும்புகழையும்
   இ. வானத்தையும் பூமியையும் ஈ. வானத்தையும்பேரொலியையும்

2. "சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி" என்னும் அடியில் பாக்கம் என்பது
   அ. புத்தர் ஆ. மூதூர்
   இ. பேரூர் ஈ. சிற்றூர்

3. ஒலிம்பிக்கில் வெற்றிபெற்ற விளையாட்டு வீரர். நாளை இந்தியா வருகிறார்! என்பது
   அ. பால் வழுவமைதி ஆ. இடவழுவமைதி
   இ. கால வழுவமைதி ஈ. மரபு வழுவமைதி

4. கண்ணோட்டம் என்னும் சொல்லின் பொருள்
   அ. கவனித்தல் ஆ. உற்று நோக்கல்
   இ. இரக்கம் ஈ. முயற்சி

5. திராவிட வேதம் என்பது
   அ. பெரியபுரராணம் ஆ. பெரியதிருமொழி
   இ. நாலாயிர திவ்ய பிரபந்தம் ஈ. முகுந்தமாலை



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

6. **நச்சப்படாதவன் செல்வம் நடுஊருள் நச்சுமரம் பழுத்தற்று இவற்றில்பயின்று வந்த அணி**
அ. எடுத்துக்காட்டு உவமையணி ஆ. சொல்பின்வருநிலலயணி
இ. தீவகணி ஈ. உவமையணி

7. **பெயரெச்சங்களை செய என்னும் வாய்பாட்டுவினையெச்சத்துடன் சேர்ப்பதன் மூலம் உருவானது**
அ. கூட்டுநிலைப் பெயரெச்சங்கள் ஆ. கூட்டுநிலைவினையெச்சம்
இ. துணைவினை ஈ. பெயரெச்சத்தொடர்

8. **அறிஞருக்கு நூல் அறிஞரது நூல் ஆகியசொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்துக்காரணமாக அமைவது**
அ. வேற்றுமைஉருபு ஆ.எழுவாய்
இ. உவம உருபு ஈ. உரிச்சொல்

9. **'வாரா' என்னும் சொல்லின் இலக்கணக் குறிப்பு**
அ. பெயரெச்சம ஆ. விளித்தொடர்
இ. எழுவாய் ஈ. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

10. **'என் அம்மை வந்தாள்' இத்தொடர் என்னவழுவமைதி இடம் பெற்றுள்ளது**
அ. மரபுவழுவமைதி ஆ. பால் வழுவமைதி
இ. திணைவழுவமைதி ஈ. கால வழுவமைதி

11. **தமிழரின் விருந்தோம்பலில் அடிப்படைப் பண்பு**
அ. ஈதற்கடன் ஆ. பகிர்ந்துண்ணல்
இ. விருந்து படைத்தல் ஈ. மகிழ்ந்துண்ணல்

12. **கறங்கு இசை விழவின் உடந்தை என்றும்அகநாநூற்றுப் பாடலில்'உறந்தை' இடம் பெற்றுள்ளமாவட்டம்**
அ. நாமக்கல் ஆ. திருச்சிராப்பள்ளி
இ. திண்டுக்கல் ஈ. கரூர்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

***பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி:***

நும்இல் போலக் கோளாது கெழீஇ
சேட் புலம்பு அகல இனிய கூறி
பரூஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு
குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவிர்

13. ***இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல்***

*அ. மலைப்படுகடாம்* *ஆ.காசிக்காண்டம்*

*இ. பரிபாடல்* *ஈ. பெருமாள் திருமொழி*

14. ***இப்பாடலின் ஆசிரியர்***

*அ. சீவலமாறன்* *ஆ. பெருங்குன்றூரார்*

*இ. குலசேகர்* *ஈ. கீரந்தையார்*

15. ***'இறடிப் பொம்மல் ' என்பதன் பொருள்***

*அ. பொம்மை* *ஆ.சோறு*

*இ. பெண்* *ஈ. தினைச்சோறு*

***பகுதி - II ( மதிப்பெண்கள் - 18)***

***பிரிவு - 1***

4 × 2 = 8

***எவையேனும் 4 வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளி:***
***(21 - வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்)***

16. ***விடைக்கேற்ற வினா அமைக்க.***

***அ.*** *பண்டையத் தமிழர்கள் பண்பில் மட்டுமன்றி, கலைகளிலும் சிறந்து விளங்கினர்.*

***ஆ.*** *உயிரினங்களில் மனிதரை உயர்த்திக் காட்டுவது அவர்களின் சிந்தனை ஆற்றலே!*

17. *யாருடைய நட்பினைக் கைவிடுதல் பலமடங்கு தீமையைத் தரும்?*
18. *காசிக்காண்டம் எந்தெந்த கருத்துக்களை உள்ளடக்கியது?*
19. *அண்டம் குறித்து திருவாசகம் கூறுவது யாது?*



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

20. நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தில் பெருமாள் திருமொழியில் எங்கு இடம்பெற்றுள்ளது?
21. 'அறிவு' என முடியும் குறளை எழுது?

**பிரிவு - 2**

5 × 2 = 10

**எவையேனும் 5 வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளி:**

22. அண்ணன் நேற்று வீட்டிற்கு வந்தது. அண்ணன் புறப்படும்போது அம்மா வழியனுப்பியது. (வழுவை வழாநிலையாக மாற்றுக)
23. **பொருளுக்கேற்ற அடியைப் பொருத்துக:**

| | | |
|---|---|---|
| உயிரைவிட சிறப்பானது | - | மேன்மை |
| பழுத்த நச்சுமரம் போன்றது | - | உயிரினும் ஓம்பப்படும் |
| ஒழுக்கத்தின் உயர்வு | - | நச்சுமரம் பழுத்தற்று |

24. **கலைச் சொற்கள் தருக.**
    DEVOTIONAL LITERATURE
    SPACE TECHNOLOGY
25. **கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.**
    (வளி - வாளி)
26. வழு - வழுவமைதி வேறுபடுத்துக.
27. **பெருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக:**
    தந்தை மகனே நாளை உன்னுடைய தோழன் அழகை அழைத்து வா என்று சொன்னார்
28. **பகுபத உறுப்பிலக்கணம் தருக.**
    மலைந்து

**பகுதி - III (மதிப்பெண்கள் - 18)**

**பிரிவு - 1**

2 × 3 = 6

**எவையேனும் 2 வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி:**

29. செயற்கை நுண்ணறிவு பொதித்த இயந்திரங்களுக்கு ஓய்வு தேவையில்லை உண்மையா?



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

30. விருந்தோம்பலுக்கு வறுமை ஒரு தடையில்லை என்பதை உணர்த்த புறநானூறுச் சான்று நிறுவுக?

31. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக் காலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபோது நெருப்புப் பந்துபோல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர்ப் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக் காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப் பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

**அ) பத்தியில் உள்ள அடுக்குத்தொடர்களை எடுத்து எழுதுக.**

**ஆ) புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?**

**இ) மழை பெய்த - இத்தொடரை வினைத்தொயாக மாற்றுக.**

**ஈ) இப்பத்தி உனர்த்தும் அறிவியல் கொள்கை யாது?**

**உ) உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாக நீவிர் கருதுவன யாவை?**

## பிரிவு - 2

2 × 3 = 6

**எவையேனும் 2 வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி:**

**(34 - வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்)**

32. முல்லை நிலத்திலிருந்தும் மருத நிலத்திலிருந்தும் கிடைக்கும் உணவுப் பொருட்கள் யாவை?

33. "காலில் ஏழடிஏழடிப் பின் சென்று" - இடம் சுட்டி எழுதுக?

34. **அடிபிறழாமல் எழுதுக.**

"பார்ப்பான் அடியேனே" என முடியும் தொழில்நுட்பம் பகுதியில் இடம் பெறும் பாடலை எழுதுக.

**(அல்லது)**

"ஒழுக்கமும் வழிபடும் பண்பே" என முடியும் சீவலமாறன் எழுதிய பாடலை எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## பிரிவு - 3

2 × 3 = 6

**எவையேனும் 2 வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி:**

35. தொகா நிலைத் தொடர்கள் எவையேனும் 2 சான்று தந்து விளக்குக?

36. **கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க் கடுக்கிய**
**கோடி உண்டாயினும் இல்.**
- இக்குறட்பாவிற்கு அலக்கிட்டு வாய்பாடு தருக.

37. எடுத்துக்காட்டு உவமையணி குறித்து எழுதுக?

## பிரிவு - 4 (மதிப்பெண்கள் - 25)

5 × 5 = 25

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:**

